
தினபூமி
thinaboomi.com
பூமி: 21 சுற்று: 146 வைகாசி 07
RNI Regn. No. 61494/94
வேலூர், புதன், மே 21, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**விரைவில் ரஷ்யா - உக்ரைன் போர் நிறுத்த பேச்சுவார்த்தை: அமெரிக்க அதிபர் அறிவிப்பு**

...2-ம் பக்கம்

**சிவில் நீதிபதி தேர்வு எழுத 3 ஆண்டு அனுபவம் தேவை: சுப்ரீம் கோர்ட் உத்தரவு**

...3-ம் பக்கம்

**மோதிக் கொண்ட சம்பவம்: அபிஷேக் - திக்வேஷ் ரதிக்கு அபராதம்; விளையாட தடை**

...6-ம் பக்கம்





சென்னை மாநகராட்சிக்குட்பட்ட திரு.வி.க. நகர் மண்டலம், டெமல்லஸ் சாலையில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இதில் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மேலாண்மை இயக்குநர் ஜி.வினய், துணை ஆணையர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி உடனிருந்தனர்.

### விரைவில் தொடங்கும் தென்மேற்கு பருவமழை:

# வெள்ளத்தடுப்பு பணிகள் குறித்து முதல்வர் ஸ்டாலின் நேரில் ஆய்வு

## பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவு

சென்னை, மே 21-

**தென்மேற்கு பருவமழை விரைவில் தொடங்கவுள்ள நிலையில் சென்னையில் வெள்ளத் தடுப்பு பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.**

**முதல்வர் தலைமையில்**

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று முன்தினம் (19.05.2025) தலைமைச் செயலகத்தில் தென்மேற்கு பருவமழையையொட்டி மாநிலத்தில் பல்வேறு துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தென்மேற்குப் பருவமழை காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளை திறம்பட எதிர்கொள்ள, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையம் 24 மணி நேரமும் செயல்படுவதையும், தகவல் தொடர்பு சாதனங்களின் பயன்பாட்டையும், மீட்பு உபகரணங்கள் மற்றும் வாகனங்களின் தயார் நிலையையும் உறுதி செய்திடவேண்டும் என்றும், வழக்கமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, அரசு அலுவலர்கள் தங்கள் பகுதிகளில் சமீபகாலத்தில் ஏற்பட்ட பாதிப்புகளின் அடிப்படையில் முன்னெச்சரிக்கையோடு செயல்பட்டால் பேரிடர் காலங்களில் ஏற்படுகின்ற பல பாதிப்புகளைத் தவிர்க்கலாம் என்றும் அறிவுறுத்தினார்.

**அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்...**

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் கட்டுமானப் பணிகள், நீர் வழிகால்வாய்கள் மற்றும் குளங்கள் மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தூர்வாருதல் ஆகியவற்றை விரைந்து முடிக்க வேண்டும். காலத்துக்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

**மழைநீர் வடிகால் பணிகளை...**

அதன் தொடர்ச்சியாக, நேற்று (20.5.2025) முதல்வர் மு.க.ஸ்டாலின், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வால்டாக்ஸ் சாலையில் உள்ள கால்வாயில் ஆகாயத்தாமரையை அகற்றும் பணி, டெமல்லஸ் சாலையில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, ஓட்டேரி நல்லா கால்வாயை மேம்படுத்தும் பணி மற்றும் ஓட்டேரி மெட்ரோ ரயில் நிலையக் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பெருநகர சென்னை மாநகராட்சி வால்டாக்ஸ் சாலை, கல்யாணபுரம் பகுதியில் நீர்வளத் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 17.3 கி.மீ நீளம் கொண்ட பக்கிங்காம் கால்வாயில் ரோபோட்டிக் எக்ஸ்வேட்டர் வாகனம் மூலம் ஆகாயத்தாமரை அகற்றும் பணியை தமிழ்நாடு முதல்வர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**மேம்பாட்டுப் பணிகள்..**

அதனைத் தொடர்ந்து, திரு.வி.க. நகர் மண்டலம், டெமல்லஸ் சாலைப் பகுதியில் 17.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை முதல்வர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த மழைநீர் வடிகாலானது, முனுசாமி கால்வாயில் இருந்து பக்கிங்காம் கால்வாயினை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் வார்டு 73, 76 மற்றும் 77-க்கு உட்பட்ட அங்காளம்மன் கோவில் தெரு, ராஜா தோட்டம் பழைய ஆடு தொட்டி சாலை, கே.எம். கார்டன் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் தேங்குவது தடுக்கப்படும். தொடர்ந்து, திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரியில்

(கடைசி பக்கம் பார்க்க)

### சென்னை, மதுரை உள்ளிட்ட பகுதிகளில்

# ரூ.735 கோடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4,978 குடியிருப்புகள் 4 வணிக வளாகங்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, மே 21-

**தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சென்னை மற்றும் காஞ்சிபுரத்தில் ரூ.527.84 கோடியில் கட்டப்பட்ட 4,978 குடியிருப்புகள் மற்றும் 207 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் மதுரையில் கட்டப்பட்டுள்ள 4 வணிக வளாகங்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காணொலிக்காட்சி மூலம் திறந்து வைத்தார்.**

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டுவசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் கலைஞரால் 1970-ம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிய குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டன. அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் சென்னையில் கைலாசபுரம் திட்டப்பகுதியில் தூண் மற்றும் 14 தளங்களுடன் 63 கோடியே 34 லட்சம் ரூபாய் செலவில் 392 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்.

காஞ்சிபுரம் மாவட்டம், சாலமங்கலம் பகுதி 1 திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 51 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் 420 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் என மொத்தம் 527 கோடியே 84 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4,978 குடியிருப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 152 திட்டப் பகுதிகளில் 5,946.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 52,397 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இது வரை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில், 773.64 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3113 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகை குடியிருப்புகள், 841.70 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 1447 அடுக்குமாடி குடியிருப்புகள், 56.31 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 1603 மனை மேம்பாட்டு திட்டம்,

117.17 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 10 வணிக வளாகங்கள், 67.32 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 7 வாரிய கோட்ட அலுவலகங்கள் மற்றும் வைப்பு நிதி திட்டத்தின் கீழ் நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கு 10.88 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 3 கோட்ட அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டம், நெற்குன்றத்தில் 25 கோடியே 27 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம்.

சி.ஐ.டி நகர் பகுதி 6-ல் 64 கோடியே 67 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம், சி.ஐ.டி நகர் பகுதி 7-ல் 66 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் மற்றும் மதுரை மாவட்டம், தோப்பூரில் 51 கோடியே 77 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகம் என மொத்தம் 207 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 4 வணிக வளாகங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்கள் சு. முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### இலவச சலுகைகள் அனைத்தும் தொடரும்:

# வீட்டு மின் இணைப்புகளுக்கு எந்த கட்டண உயர்வு இல்லை

## தமிழ்நாடு அரசு விளக்கம்

சென்னை, மே 21-

**வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை என்றும், அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும் என்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், கடந்த சில நாட்களாக செய்தி ஊடகங்களில் மின் கட்டண உயர்வு குறித்து அதிகாரபூர்வமற்ற தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இது குறித்து பின்வருமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தற்சமயம் மின் கட்டண உயர்வு குறித்து எவ்வித ஆணையும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் வெளியிடப்படவில்லை.

எனினும் ஒழுங்குமுறை ஆணையம், மின்கட்டணம் தொடர்பான ஆணை வழங்கிடும்போது, அதனை நடைமுறைப்படுத்துகையில் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இருக்கக் கூடாது எனவும், தற்போது வழங்கப்படும் அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடர வேண்டும் எனவும் முதல்வர் அறிவுறுத்தியுள்ளார் என்று போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மின் கட்டண உயர்வு சலசலப்பு ஏன்? - தமிழகத்தில் 3 கோடிக்கும் அதிகமான மின் இணைப்புகள் உள்ளன. இவற்றுக்கான மின்சாரத்தைக் கையாளும் மின் வாரியத்தின் இழப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் 2022-ல் மின் கட்டணம் 30 சதவீதத்துக்கு மேல் உயர்த்தப்பட்டது. மேலும், 2026-27 வரை ஆண்டுதோறும் ஜூலை 1-ம் தேதி முதல் மின் கட்டணத்தை உயர்த்தவும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி வழங்கியது. அதன்படி, கடந்த 2023 ஜூலையில் 2.18 சதவீதம் கட்டணம் உயர்த்தப்பட்டது. 2024-ம் ஆண்டு 4.83 சதவீதம் உயர்த்தப்பட்டது. அதில், வீடுகளுக்கான கட்டண உயர்வை தமிழக அரசு ஏற்றது.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டும் 6 சதவீதம் அல்லது ஏப்ரல் மாத பணவீக்க விகிதம் ஆகிய இரண்டில் எது குறைவோ, அந்த அளவுக்கு கட்டணம் உயர்த்தப்பட வேண்டும். இதன்படி, 3.16 சதவீதம் அளவுக்கு மின் கட்டணம் உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தகவல்கள் வெளியாகின. இந்த உயர்வு ஜூலை 1-ம் தேதி முதல் அமல்படுத்தப்பட வாய்ப்பு இருப்பதாகவும், இந்தக் கட்டண உயர்வு வீடுகள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கு அமல்படுத்தப்பட உள்ளதாகவும் கூறப்பட்டது.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகளிடம் கேட்டபோது, மின்கட்டண உயர்வு குறித்து தமிழக அரசு இது வரை எந்த முடிவும் எடுக்கவில்லை. எனினும், மத்திய அரசின் உதய் மின் திட்டத்தில் தமிழக அரசு கையெழுத்திட்டு இருப்பதால், 2027 வரை ஆண்டுதோறும் ஜூலை மாதம் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்றனர். இந்தப் பின்னணியில், வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை என்றும், அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும் என்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

### வக்பு திருத்த சட்டத்துக்கு எதிரான மனுக்கள்:

# சுப்ரீம் கோர்ட்டில் காரசார விவாதம்

புதுடில்லி, மே 21-

**மத்திய அரசு கொண்டு வந்துள்ள வக்ப் சட்ட திருத்தத்திற்கு எதிரான வழக்கில் சுப்ரீம் கோர்ட்டில் அனல் பறக்கும் விவாதம் நடந்தது.**

வக்ப் போர்டு சொத்து தொடர்பாக பார்லி.,யில் நிறைவேற்றப்பட்ட சட்டத் திருத்தத்திற்கு எதிராக, காங்கிரஸ், சமாஜ்வாதி, தி.மு.க., உள்ளிட்ட கட்சிகள், ஏராளமான முஸ்லிம் அமைப்புகள் என, 100க்கும் அதிகமான மனுக்கள் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் மீதான விசாரணை, மே 20ம் தேதியான நேற்று, தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு முன்பு நடைபெற்றது.

இந்த விவாதத்தில் அரசு தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, 3 பிரச்னைகள் குறித்து ஆராய வேண்டும் என்றார். மேலும், சொத்து யாருக்கு என்பதில் கோர்ட்டால், பயனீட்டாளர்கள், வக்ப் போர்டால் அடையாளப்படுத்தும் சொத்துக்களை அறிவிக்க முடியாத நிலை உள்ளது. வக்ப், கோர்ட், பத்திரம், பயனீட்டாளர்களில் யார் அறிவிக்க முடியும் என்பதை தெளிவுப்படுத்த வேண்டிய சூழல் இருக்கிறது'என்றார்.

மனுதாரர்கள் தரப்பில் கபில்சிபல் வாதிடுகையில், இந்த வழக்கை தனித்தனியாக ஒவ்வொரு பிரிவாகவும் விசாரிக்க முடியாது. வக்ப் சட்ட திருத்தத்தின் பின்னணியில் உள்ள யோசனைகள் முழு முஸ்லிம் அமைப்பையும் காப்பாற்றுவது போன்ற கைப்பற்றும் நோக்கம் கொண்டதாகும்.

நீங்கள் மசூதிக்கு சென்றால் பார்க்கலாம் அங்கு காணிக்கை இல்லை. கோயில்களை போல் ஆயிரக்கணக்கான கோடிகள் இல்லை. அப்போது தலைமை நீதிபதி கவாய், ஆமாம் நானும் ஆலயங்கள், மசூதிகள் சென்றிருக்கிறேன், இது அடிக்கடி நடந்திருக்கிறது என்றார்.

மேலும் கபில்சிபல் வாதிடுகையில்; நான் மசூதிகள் குறித்து பேசுகிறேன். ஒரு மத நிறுவனத்திற்கு அரசு நிதியளிக்க முடியாது. வக்ப் சொத்துக்களை எந்தவிதமான வழிமுறைகளையும்

(கடைசி பக்கம் பார்க்க)

# அரசு கலை கல்லூரிகளில் சேர 1.61 லட்சம் மாணவர்கள் பதிவு

## அமைச்சர் கோவி. செழியன் தகவல்

சென்னை, மே 21-

**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பப் பதிவு தொடங்கப்பட்ட 13 நாட்களில் ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 324 மாணவர்கள் பதிவு செய்துள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அமைச்சர் கோவி. செழியன் கூறியுள்ளதாவது: தமிழகத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப்பதிவு மே 7-ம் தேதி தொடங்கப்பட்டது. திங்கட்கிழமை (மே 19) மாலை 6 மணி நிலவரப்படி, ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 324 மாணவர்கள் விண்ணப்பப் பதிவு செய்துள்ளனர்.

மாணவர்கள் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் தங்களது சேர்க்கைக்கான விண்ணப்பங்களை மே 27-ம் தேதி வரை பதிவு செய்து கொள்ளலாம். மாணவர்களுக்கு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் தமிழகம் முழுவதும் 165 உதவி மையங்கள் மற்றும் மாணவர்கள் சேர்க்கை வழிகாட்டு சேவை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அந்தந்த சேவை மையங்களை தொடர்பு கொள்ளலாம். மேலும், 044-24342911 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவோ அல்லது dceofficehelpdesk@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவோ தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்ளலாம். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

### மத்தியகிழக்கு அரபிக்கடலில்

# இன்று உருவாகிறது புதிய புயல் சின்னம்

## தமிழகத்தில் வரும் 25-ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, மே 21-

**மத்தியகிழக்கு அரபிக்கடலில் இன்று உருவாகிறது புதிய காற்றழுத்த தாழ்வு புகுதி (புயல் சின்னம்) என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் வரும் 25-ம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: மத்தியமேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளின் மேல் ஒரு வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால் மத்தியகிழக்கு அரபிக்கடலில் இன்று குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும். இன்று மேல்காற்று சுழற்சி உருவாக வாய்ப்பு உள்ளது. நாளை குறைந்த காற்றழுத்தம் உருவாகலாம். குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வடக்கு நோக்கி நகர்ந்து மேலும் தீவிரமடைய வாய்ப்பு உள்ளது.


தென்மேற்கு பருவமழை கேரளாவில் அடுத்த 4 அல்லது 5 தினங்களில் துவங்குவதற்கான வாய்ப்புள்ளது.

அதே சமயத்தில் தமிழகத்தில் சில பகுதிகளிலும் பரவுவதற்கான வாய்ப்புள்ளது. தமிழகத்தில் அடுத்த 5 நாட்கள் வரும் 25-ம் தேதி வரை ஒரு சில இடங்களில், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.


இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
| --- | --- |
| -872.98 | -261.55 |
| பாயிண்ட் 81,186.44 | பாயிண்ட் 24,683.90 |



**தங்கம்** 1 சவரன் ₹69,680 / 1 கிராம் ₹8,710



**வெள்ளி** 1 கிலோ ₹108,000 / 1 கிராம் ₹108.00

**டாலர்** ₹85.53

**பெட்ரோல்** ₹102.63 **டீசல்** ₹94.24

# விரைவில் ரஷ்யா - உக்ரைன் போர் நிறுத்த பேச்சுவார்த்தை


## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு

**அமெரிக்கா, மே 21-**

ரஷ்யா - உக்ரைன் போர் நிறுத்தப் பேச்சு வார்த்தை உடனடியாக தொடங்கும் என்று ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுடனான இரண்டு மணி நேர தொலைபேசி உரையாடலுக்குப் பிறகு அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக தளத்தில் "ரஷ்யாவும் உக்ரைனும் உடனடியாக போர்நிறுத்தம் குறித்த பேச்சுவார்த்தையை தொடங்க இருக்கிறது" என்று தெரிவித்துள்ளார். இது குறித்து ட்ரம்ப் வெளியிட்ட பதிவில், "ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுடன் எனது இரண்டு மணி நேர உரையாடலை நிறைவு செய்தேன். அது மிகவும் சிறப்பாக நடந்தது என நான் நம்புகிறேன். ரஷ்யாவும் உக்ரைனும் உடனடியாக போர் நிறுத்தம் தொடர்பாக, இன்னும் முக்கியமாக, போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க உள்ளனர். அதற்கான நிபந்தனைகள் குறித்து இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

இந்த ரத்தக்களரியான பேரழிவு முடிந்ததும், அமெரிக்காவுடன் பெரிய அளவிலான வர்த்தகம் செய்ய ரஷ்யா விரும்புகிறது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ரஷ்யாவுக்கு மிகப் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு மற்றும் வளத்தை உருவாக்க மிகப் பெரிய வாய்ப்பு



உள்ளது. அதன் ஆற்றல் அளவில்லாதது. அதே போல், உக்ரைனும் தனது நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் செயல்பாட்டில், வர்த்தகத்தில் பயனாளியாக இருக்க முடியும். ரஷ்யாவுக்கு உக்ரைனுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் உடனடியாகத் தொடங்கும்.

புதினுடனான அழைப்புக்குப் பிறகு, உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி, ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன், பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான், இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி, ஜெர்மனி அதிபர் பிரீட்ரிக் மெர்ஸ், பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப் ஆகியோருக்கு நான் தகவல் தெரிவித்துள்ளேன். போப் பிரதிநிதித்துவப்படுத்தும் வாடிகன், இந்த பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் மிகவும் ஆர்வமாக இருப்பதாகக் கூறியுள்ளது. செயல்முறை தொடங்கட்டும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## திருப்பூர் அருகே

# மரத்தில் கார் மோதியதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் பலி

**திருப்பூர், மே 21-**

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டம், மூணாறு பகுதியை சேர்ந்தவர் ராஜா (46). இவரது மனைவி ஈரோடு மாவட்டம், அரச்சலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பந்த செவிலியராக பணிபுரிந்து வருகிறார். ராஜா, கடந்த சில தினங்களுக்கு முன்பு, தனது குடும்பத்துடன் கேரளாவில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்ற நிலையில், நேற்று காரில் ஈரோடு வந்துகொண்டிருந்தனர்.

அப்போது காங்கேயம் அருகே நத்தக்காடையூர் பகுதியில் வந்த போது, கட்டுப்பாட்டை இழந்த கார், எதிரே இருந்த புளியமரத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இதில், காரை ஓட்டி வந்த ராஜா, அவரது மனைவி, மூத்த மகள் ஹேமமித்ரா ஆகிய 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயமடைந்த 11 வயது சிறுமி திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.விபத்து குறித்து காங்கேயம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை ராணி மேரி கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ராணி மேரி கல்லூரியில் 42 கோடி ரூபாய் செலவில், கட்டப்பட்டுள்ள மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடத்தை திறந்து வைத்து, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

# குற்றாலம் மெயின் அருவியில் குளிக்க தடை

**தென்காசி, மே 21-**

தென்மேற்கு பருவமழை பல்வேறு மாநிலங்களில் தீவிரமடைந்து வருகிறது. கர்நாடகாவின் பெங்களூருவில் கடந்த சில நாட்களாக பெய்த தொடர் கனமழை காரணமாக அங்கு பெரும்பாலான இடங்களில் வெள்ளபாதிப்பு ஏற்பட்டுள்ளது. நேற்றும் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ள நிலையில், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதேபோல் தமிழகத்தை பொறுத்தவரையில் மேற்கு தொடர்ச்சி மழை பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில், குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் குற்றால அருவிகளில் நீர்வரத்து படிப்படியாக உயர்ந்து வருகிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குற்றாலம் மெயின் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐந்தருவி, புலியருவி, சிற்றருவி, பழைய குற்றால அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூத்த அணு விஞ்ஞானி மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, மே 21-**

மூத்த அணு விஞ்ஞானி எம்.ஆர். ஸ்ரீனிவாசன் மறைவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

நாட்டின் உள்நாட்டு அணுசக்தி திட்டத்தில் முக்கிய பங்கு வகித்த மூத்த விஞ்ஞானியும், அணுசக்தி ஆணையத்தின் முன்னாள் தலைவருமான எம்.ஆர். ஸ்ரீனிவாசன் (95) நேற்று காலமானார்.

கர்நாடகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட எம்.ஆர்.சீனிவாசன், ஊட்டியில் வசித்து வந்த நிலையில், வயதுமூப்பு காரணமாக ஏற்பட்ட உடல்நலக் குறைபாட்டால் நேற்று (செவ்வாய்க்கிழமை) உயிரிழந்தார்.

இந்நிலையில் எம்.ஆர். சீனிவாசன் அவர்களின் மறைவுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- இந்திய அணு ஆற்றல் திட்டத்தின் தூணாக விளங்கிய முனைவர் எம்.ஆர். சீனிவாசன் அவர்களின் மறைவினால் வருந்துகிறோம். சீனிவாசன் அவர்களின் பயணம் இந்திய அணுத் திட்டத்தின் தந்தையாகப் போற்றப்படும் முனைவர் ஹோமி ஜே. பாபா அவர்களுடன் இணைந்து இந்தியாவின் முதல் அணு உலையைக் கட்டமைப்பதில் தொடங்கியது. பின்பு, 18 அணு ஆற்றல் அலகுகளைக் கட்டமைப்பதில் தலைமைப் பங்காற்றி ஆற்றல் தன்னிறைவுக்கு வழிவகுத்தார். தேசத்தின் வளர்ச்சிக்காக உண்மையாகப் பாடுபட்ட அவரது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விசா முடிந்தும் தங்கியிருக்கும் இந்தியர்கள் வெளியேற அமெரிக்க அரசு உத்தரவு

**வாஷிங்டன், மே 21-**

விசா முடிந்தும் வெளியேற இந்தியர்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக 2-வது முறையாக டொனால்டு டிரம்ப் பதவியேற்ற பிறகு, நாட்டில் வசித்து வரும் வெளிநாட்டவர்களின் பல்வேறு உரிமைகள், சலுகைகள் பறிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், விசா முடிந்தும் வெளியேறாவிட்டால் நாடு கடத்தப்படுவீர்கள் என இந்தியர்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன்படி விசா காலத்தை விட அதிகமாக தங்கியிருப்பது நாடுகடத்தலுக்கும், விசா முடிந்தும் வெளியேறாத இந்தியர்களுக்கு மீண்டும் அமெரிக்காவுக்கு வர நிரந்தர தடை விதிக்கப்படும் என்றும் அமெரிக்கா அரசு எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் தனது எக்ஸ் வலைதளத்தில், "நீங்கள் (இந்தியர்கள்) அனுமதிக்கப்பட்ட தங்கியிருக்கும் காலத்திற்குப் பிறகும் அமெரிக்காவில் தங்கினால், நீங்கள் நாடு கடத்தப்படலாம், மேலும் எதிர்காலத்தில் அமெரிக்காவுக்கு பயணம் செய்வதற்கு நிரந்தரத் தடையை எதிர்கொள்ள நேரிடும்'' என்று பதிவிட்டுள்ளது. அமெரிக்காவில் சட்டப்பூர்வமாக சுமார் 4.78 கோடிக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் பணியாற்றி வரும்நிலையில், டிரம்பின் இந்த புதிய அறிவிப்பால் அங்கு வசித்து வரும் 45 லட்சம் இந்தியர்களும் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.

# நேபாளத்தில் நிலநடுக்கம்

**நேபாள, மே 21-**

நேபாளத்தின் மேற்குப் பகுதியிலுள்ள காஸ்கி மாவட்டத்தில் நேற்று மதியம் 1.59 மணியளவில், 4.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக நிலநடுக்க கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. காஸ்கி மாவட்டத்தின் சினுவா எனும் பகுதியை மையமாகக் கொண்டு உருவான இந்த நிலநடுக்கம் அண்டை மாவட்டங்களான தனாஹு, பர்வாத் மற்றும் பாக்லங் ஆகிய பகுதிகளிலும் உணரப்பட்டதாகக் கூறப்படுகிறது. இருப்பினும், இந்த நிலநடுக்கத்தினால் உயிர் மற்றும் பொருள் சேதங்கள் எதுவும் ஏற்பட்டதாக இதுவரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

முன்னதாக, சோலுகும்பு மாவட்டத்தில் கடந்த மே 14 ஆம் தேதியன்று இதேபோல் 4.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது பதிவாகியது. ஒரே மாதிரியான ரிக்டர் அளவுகளில் தொடர்ந்து நிலநடுக்கம் ஏற்படுவது, நேபாள மக்க்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

# சாத்தான்களின் ஆட்சிக்கு சாத்தான் குளம் சம்பவமே சாட்சி: சேகர்பாபு

**சென்னை, மே 21-**

சாத்தான்களின் ஆட்சிக்கு சாத்தான்குளம் சம்பவமே சாட்சி என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

உங்கள் அலங்கோல ஆட்சிக்கு அரக்கோணமே சாட்சி என்று அரக்கோண சம்பவத்தை மேற்கோள் காட்டி எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்து இருந்தார். இதற்கு பதில் அளிக்கும் விதமாக, ஏற்கனவே துப்புக் கெட்ட ஆட்சிக்கு தூத்துக்குடி சாட்சி என்றும் பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம் என்று அமைச்சர் சேகர் பாபு கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், ஆட்சியை பொறுத்தளவில் தவறு நடக்கின்ற பட்சத்தில் அதன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தான் குற்றம்சாட்ட வேண்டும். தவறு நடப்பதற்கு முன்பு வருமுன் காப்பது என்பது போல் தவறு நடக்காமல் நடவடிக்கை என்பது ஒருபுறம். தவறு நடந்து விட்ட பிறகு அதன் கடுமையான நடவடிக்கை எடுப்பது என்பது இன்னொருபுறம். இன்னார், இனியவர் என்று எங்களுடைய முதல்வருக்கு பாகுபாடு இல்லை.

தவறு யார் இழைத்து இருந்தாலும் சொந்தக்கட்சிக்காரர் இழைத்து இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான் எங்கள் முதல்வருடைய நோக்கம், நிலைப்பாடு. அந்த வகையில், மாநகராட்சியில் 2 மாமன்ற மாநகராட்சி உறுப்பினர்கள், அதிகாரிகளோடு சண்டையிடுவது குறித்து அவருடைய கவனத்திற்கு சென்ற உடன் பதவியில் இருந்தே நீக்கிய ஆட்சி தமிழக முதல்வரின் ஆட்சி. நீதியின் ஆட்சி. சட்டத்தின் ஆட்சி. கடந்த காலங்களில் நடந்தது சாத்தான்களின் ஆட்சி.. அதற்கு சாட்சி சாத்தான்குளம் சம்பவமே அதற்கு ஒரு சாட்சி என்றார்.

## 12 நாட்களுக்கு பிறகு

# மீண்டும் அட்டாரி-வாகா எல்லையில் தொடங்கியது கொடியிறக்க நிகழ்வு

**புதுடில்லி, மே 21-**

போர் பதட்டம் காரணமாக மூடப்பட்டிருந்த அட்டாரி, வாகா எல்லையில் நிறுத்தப்பட்டு இருந்த கொடியிறக்க நிகழ்வு 12 நாட்களுக்கு பின்னர் நேற்று முதல் மீண்டும் துவங்குகிறது.


பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் எழுந்தது. இதன் காரணமாக, இருநாடுகளுக்கும் இடையேயான அட்டாரி, வாகா எல்லை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. நாள்தோறும் மாலையில் நடைபெறும் கொடியிறக்க நிகழ்வும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந் நிலையில், நேற்று முதல் தினமும், அட்டாரி, வாகா எல்லை கொடியிறக்க நிகழ்வு நடைபெறும். 12 நாட்கள் கழித்து, பஞ்சாப் அமிர்தசரசில் உள்ள அட்டாரி, வாகா எல்லையிலும், பெரோஸ்பூரில் உள்ள ஹூசைனிவாலா எல்லையிலும் நேற்று முதல் மீண்டும் தொடங்கும். இதற்கு முன்னர் இருந்தது போல் அல்லாமல் வாயில்கள் மூடப்பட்டு இருக்கும். நிகழ்வின் போது பங்கேற்பாளர்கள் கைகுலுக்க மாட்டார்கள்.

1959-ம் ஆண்டு முதல் எல்லையில் நடத்தப்பட்டு வந்த கொடியிறக்க நிகழ்வு, மே 7-ம் தேதி ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பின்னர் மே 8ல் இருந்து நிறுத்தப்பட்டு இருந்தது.

தற்போது 12 நாட்களுக்கு பின்னர் நேற்று முதல் மீண்டும் தொடங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**21-05-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பிறருக்கு உதவி புரிவதால் பேரின்பம் அடைவார்கள். படிப்பில் வெற்றிகள் படிப்படியாய் வரும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேர்ந்து மகிழ்வர். பணவரவு மற்றும் பெண்களால் இலாபம் ஏற்பட மனம் மகிழும்.

**ரிஷபம்:-** புதிய உத்தியோகமும், உத்வேகமும் ஏற்படும் நாள். பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு.

**மிதுனம்:-** இன்று, தெய்வ நம்பிக்கையும், பாக்கிய விருத்தியும் ஏற்படும். கோவில் திருப்பணிகள் மற்றும் அன்னதானங்கள் செய்ய மனம் விழையும். வாழ்க்கையின் வசந்த காலம் என்று நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

**கடகம்:-** இன்று, அதிகாரிகளிடம் பணிவோடு நடந்தால் பயன் பெறலாம். மனைவியின் கலகத்தால் உறவுகளிடையே உரசல்கள் ஏற்படலாம். பொருட்களை கவனமாக பாதுகாத்து இழப்பைத் தவிர்க்கலாம்.

**சிம்மம்:-** புதிய தொழில் பயிற்சி மற்றும் கல்வியில் தேர்ச்சி ஏற்படும். வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் திருப்திகரமான பண வரவால் சந்தோஷம் நிலவும்.

**கன்னி:-** அனைத்து நலன்களும் உண்டாகும். எதிர் பார்த்த வரவுகள் வந்து ஏற்றம் தரும். தக்க தருணத்தில் நல்ல நண்பர்களின் உதவி கிடைக்கும். மனதில் சொந்த வீடு வாங்கும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:-** உங்கள் திறமையை முழுமையாக காட்டிச் செயல்பட்டாலும் மேலிடத்தில் திருப்தி இருக்காது. வாகனங்களில் நிதானமாகச் சென்றால் தேவையற்ற விபத்துக்களை தவிர்க்கும் .இலை ஏற்படும்.

**விருச்சிகம்:-** வீட்டில் திருட்டை தவிர்க்க எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். தாயின் உடல்நிலையில் அக்கறை தேவை. காரியத்தடைகள் மற்றும் பண இழப்புகள் ஏற்படும்.

**தனுசு:-** பணவரவுகள் அதிகரிப்பதால் புதிய உற்சாகம் பிறக்கும். குழந்தைகள் பால் அன்பும், அவர்களின் முன்னேற்றத்தில் ஆர்வமும் ஏற்படும். மனைவியின் பணிவிடைகள் மகிழ்ச்சி அளிக்கும்.

**மகரம்:-** இன்று சுமாரான நாள். குடும்பத்தாரிடம் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. தோல்விகளைக் கண்டு துவளாதீர் கள். முயன்றால் வெற்றி நிச்சயம்.

**கும்பம்:-** ஆரோக்கியம் மேம்படும். படுக்கை சுகங்கள், நல்ல ஆடைகள், நண்பர்கள் அருகாமை, நல்ல அதிர்ஷ்டம் என எல்லா நலன்களும் தரும் ஏற்றமிகு நாள். வருமானம் சேரும் வளம் மிக்க நாள்.

**மீனம்:-** இன்று கட்டுக்கடங்காத செலவுகள் ஏற்படும். வாகனங்களில் செல்கையில் வேகத்தை குறைத்து, விபத்தினைத் தவிர்க்கவும். உறவுகளிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளை தவிர்க்க முயலவும்.

## கோவையில் இருந்து கேரளாவுக்கு

# உள்ளாடைக்குள் மறைத்து வைத்து ரூ.70 லட்சம் பணம், தங்கம் கடத்தல்

**திருவனந்தபுரம், மே 21-**

திருவனந்தபுரத்தில் உள்ளாடைக்குள் மறைத்து வைத்து பணம் மற்றும் தங்கத்தை கடத்திய 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

கோவையில் இருந்து கேரளாவுக்கு உரிய ஆவணங்கள் ஏதுமின்றி தங்கம், பணம் கடத்தப்படுவதாக போலீசாருக்கு தகவல் வந்தது. இதையடுத்து கேரளா மாநிலம், பாலக்காடு மாவட்டம் வேலந்தவலத்தில், போதைப் பொருள் தடுப்பு பிரிவு போலீசார் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக பைக்கில் சென்ற 3 பேரை வழிமறித்து போலீசார் சோதனை செய்தனர். இந்த சோதனையில், அவர்கள் அணிந்திருந்த பிரத்யேக உள்ளாடைகளுக்குள் இருந்து கடத்தி வந்த ரூ.70 லட்சம் ரொக்கப் பணம், 200 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இதுதொடர்பாக சாகர், மணிகண்டன் மற்றும் சந்தீப் ஆகிய 3 பேரை கைது செய்தனர். இவர்கள் யாருக்காக தங்கம் கடத்தி வந்தனர்? எங்கு இருந்து எங்கு கொண்டு செல்ல முயன்றார்கள்? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## பாக். ட்ரோன்களை எதிர்கொள்ள நடவடிக்கை:

# பொற்கோயிலில் வான்பாதுகாப்பு அமைப்பை நிறுவுவதற்கு அனுமதி

**அமிர்தசரஸ், மே 21-**

பாகிஸ்தானின் ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைத் தாக்குதலை எதிர்கொள்வதற்காக அமிர்தசரஸில் உள்ள பொற்கோயிலின் புனித வளாகத்தினுள் வான் பாதுகாப்பு அமைப்பினை நிறுவ கோயிலின் தலைமை கிராந்தி சிறப்பு அனுமதி வழங்கியுள்ளதாக ராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவால் தொடங்கப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலுக்கு பின்பு பொற்கோயிலைக் குறிவைத்து பாகிஸ்தான் பலமுறை ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல் நடத்தியதாக ராணுவ அதிகாரி ஒருவர் உறுதிபடுத்தினார்.

ராணுவ வான்பாதுகாப்பு இயக்குநர் ஜெனரல் சுமர் இவான் டி குன்ஹா கூறுகையில், "ராணுவத்தின் வான்பாதுகாப்பு அமைப்பினை நிலைநிறுத்திக்கொள்வதற்கு பொற்கோயில் தலைமை கிராந்தி அனுமதி அளித்திருப்பது சிறப்பானது. பல வருடங்களில் முதல் முறையாக அவர்கள் பொற்கோயிலின் விளக்குகளை அணைத்திருக்கலாம்.

அதனால் எங்களால் ட்ரோன்களைத் தெளிவாக பார்க்க முடிந்தது. இதுகுறித்து கோயில் நிர்வாகிகளிடம் விளக்கம் அளித்த பின்பு, அச்சுறுத்தலுக்கான சாத்தியக்கூறுகள் இருப்பதை புரிந்து கொண்டனர். தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்துசெல்லும் உலகப்புகழ் பெற்ற ஒரு நினைவுச் சின்னத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தை உணர்ந்து அவர்கள் எங்களுக்கு வான்பாதுகாப்பு அமைப்பினை நிறுவிக்கொள்ள அனுமதி அளித்தனர். அதன்படி ட்ரோன் துப்பாக்கிகள் நிறுவப்பட்டன. பொற்கோயிலின் விளக்குகள் அணைக்கப்பட்டன.

அதிருஷ்டவசமாக அவர்கள் (பாகிஸ்தான்) என்ன செய்வார்கள் என்று நாங்கள் முன்கூட்டியே யூகித்தோம். எல்லைகளைத் தாண்டி தாக்குவதற்கு முறையான இலக்குகள் இல்லாததால், கோயில்களை அவர்கள் குறிவைப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். இந்தியாவில் குழப்பங்களையும், உள்நாட்டு மோதல்களை ஏற்படுத்த அவர்கள் அதிக ஆர்வம் காட்டுவதால், நம்நாட்டு குடிமக்களையும், வழிபாட்டுத்தலங்களையும் குறிவைப்பார்கள் என்று நாங்கள் யோசித்தோம் என்றார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# கவுரவ விரிவுரையாளர் சம்பள விவகாரம்: தி.மு.க. அரசுக்கு ஓ.பி.எஸ். கோரிக்கை

**சென்னை, மே 21-**

கவுரவ விரிவுரையாளர்களுக்கான நீதிமன்ற ஆணையை செயல்படுத்த வேண்டும் தி.மு.க. அரசுக்கு முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: பல்கலைக் கழக மானியக் குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கவுரவ விரிவுரையாளர்களுக்கு 12 மாதங்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில், பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின்படி கவுரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்படவில்லை என்று தெரிவித்து, 12 மாதங்களுக்கு சம்பளம் வழங்க முடியாது என்று கல்லூரிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

கொடுப்பதும் குறைந்த சம்பளம், அதுவும் ஒரு மாதத்திற்கு கிடையாது என்று தெரிவிப்பது இயற்கை நியதிக்கு முரணான செயல் ஆகும்.

முதல்வர், இதில் உடனடியாகத் தலையிட்டு, பரிந்துரைப்படி ஊதியத்தை அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று ஓ.பி.எஸ். கூறியுள்ளார்.



சென்னை தலைமைச்செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 4 வணிக வளாகங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து முதல்வர் மு.க. ஸ்டாலின் வைத்தார். உடன் அமைச்சர்கள் முத்துசாமி, அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் க.விஜயகார்த்திகேயன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ்.சமீரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பு:

# மேட்டூர் அணை நீர்மட்டம் 109 அடியை தொட்டது

**மேட்டூர், மே 21-**

காவிரி நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் மேட்டூர் அணைக்கு நேற்று நீர்வரத்து வினாடிக்கு 9,683 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 109.33 அடியாக உயர்ந்துள்ளது.

காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் கடந்த சில தினங்களாக மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இந்நிலையில் மேட்டூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த 3 நாட்களாக கன மழை பெய்தது. இதனிடையே நேற்று முன்தினம் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் மட்டும் அல்லாது மேட்டூர் சுற்று வட்டாரத்திலும் கனமழை பெய்தது. குறிப்பாக மேட்டூரில் 3 நாட்களில் 191.2 மில்லி மீட்டர் மழை கொட்டியது. தொடர் மழை காரணமாக காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நேற்று முன்தினம் விநாடிக்கு 6,233 கன அடியாக இருந்த நிலையில் நேற்று விநாடிக்கு 9,683 கன அடியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் 108.82 அடியில் இருந்து, 109.33 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர் இருப்பு 76.74 டி.எம்.சியிலிருந்து, 77.46 டி.எம்.சியாக உயர்ந்துள்ளது. கடந்த 2 நாட்களில் அணை நீர்மட்டம் 0.81 அடியாகவும், நீர் இருப்பு 1.12 டிஎம்சியாகவும் உயர்ந்துள்ளது. காவிரி நீர் பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையால், மேட்டூர் அணைக்கான நீர்வரத்து மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நாடு முழுவதும்

# மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ள கொரோனா: 257 பேருக்கு பாதிப்பு

**புதுடில்லி, மே 21-**

நாட்டில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஏற்பட்ட கொரோனா பாதிப்பு மெல்ல மெல்ல குறைந்த நிலையில் தற்போது சீனா, சிங்கப்பூர் நாடுகளில் அதிகமாகப் பரவி வருகிறது. இந்தியாவிலும் கொரோனா பாதிப்பு மீண்டும் படிப்படியாக அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள தகவலில் இந்தியாவில் 257 பேருக்கு கொரோனா தொற்று இருப்பதாகக் கூறியுள்ளது. பாதிக்கப்பட்டோருக்கு லேசான பாதிப்புதான் இருப்பதாகவும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

மேலும் கொரோனா பாதிப்பு தொடர்பாகவும் ஆலோசனை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசு வெளியிட்டுள்ள தகவலில், தமிழகத்தில் மட்டும் 34 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் கொரோனா பாதிப்பு கட்டுப்பாட்டில் இருப்பதாக மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. கேரளம்(69), மஹாராஷ்டிரத்திலும்(44) கொரோனா பாதிப்பு உறுதியாகியுள்ளது.

இந்தியாவில் கடந்த ஒரு வாரத்தில் கொரோனா தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை 164 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா வைரஸ் ஓமிக்ரான் BA.2.86-இன் புதிய வகையான ஜேஎன். 1(JN.1) வைரஸ்தான் தற்போது அதிகம் பரவி வருகிறது. காய்ச்சல், தொண்டைப்புண், மூக்கு ஒழுகுதல், மூக்கடைப்பு, வறட்டு இருமல், சோர்வு, தலைவலி, சுவைத் தன்மையை இழத்தல், தசை வலி, கண் சிவத்தல், வயிற்றுப்போக்கு, வாந்தி உள்ளிட்டவை இதன் அறிகுறிகளாக இருக்கின்றன. இந்த ஜேஎன். 1 வகை வைரஸில் LF.7, NB.1.8 உள்பட 30 வகைகள் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

# அயோத்தி தாச பண்டிதரின் கருத்துகள் வலுக்கட்டும்; ஆதிக்கம் அழியட்டும்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, மே 21-**

சமத்துவத்தை வலியுறுத்திய அயோத்தி தாச பண்டிதரின் கருத்துகள் வலுக்கட்டும். ஆதிக்கம் அழியட்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.



திராவிடப் பேரொளி அயோத்திதாச பண்டிதரின் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் நேற்று கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மேலும், சிலைக்கு அருகே வைக்கப்பட்டிருந்த அயோத்தி தாச பண்டிதரின் உருவப் படத்திற்கு, அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு, உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி கணேசன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் இரா.வைத்திநாதன், துணை மேயர் மு.மகேஷ் குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

இதனிடையே, அயோத்தி தாசப் பண்டிதரின் பிறந்த நாளையொட்டி தமிழக முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், '' சென்னையில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபம், ஆதி திராவிட மக்களுக்காக 1000 கோடி ரூபாயில் நாம் செயல்படுத்தி வரும் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்துக்குப் பண்டிதரின் பெயர், எனத் 'திராவிடப் பேரொளி' அயோத்தி தாசரைப் போற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு. சமத்துவத்தை வலியுறுத்திய அவரது கருத்துகள் வலுக்கட்டும்.

ஆதிக்கம் அழியட்டும் என்று கூறியுள்ளார்.

# சிவில் நீதிபதி தேர்வு எழுத மூன்று ஆண்டு அனுபவம்

### சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

**புதுடெல்லி, மே 21-**

நீதித்துறைப் பணியில் சேர குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றியிருக்க வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், நீதிபதிகள் ஏ.ஜி. மசிஹ் மற்றும் கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு அளித்த தீர்ப்பில், ''சிவில் நீதிபதிகள் (ஜூனியர் பிரிவு) தேர்வு எழுதுவதற்கு குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் வழக்கறிஞராக பயிற்சி தேவை என்று நாங்கள் கருதுகிறோம்'' என்று தெரிவித்துள்ளனர். இருப்பினும், இந்த உத்தரவு நடந்து கொண்டிருக்கும் நீதித்துறை ஆட்சேர்ப்புக்கு பொருந்தாது என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

நீதித்துறையில் புதிய சட்ட பட்டதாரிகளை நியமிப்பது பல சிக்கல்களுக்கு வழிவகுத்துள்ளது என்றும், நீதித்துறை பணியில் சேர குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட் அமர்வு குறிப்பிட்டுள்ளது.

# விஷவாயு தாக்கி உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா ரூ.30 லட்சம்

### முத்தரப்பு பேச்சுவார்த்தையில் முடிவு

**திருப்பூர், மே 21-**

திருப்பூரில் விஷவாயு தாக்கி உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா ரூ.30 லட்சம் வழங்க முத்தரப்பு அமைதிப் பேச்சுவார்த்தையில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே தனியார் சாய ஆலையில் சாயக்கழிவு நீர் தொட்டியை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்ட 2 பேர் விஷவாயு தாக்கி இறந்தனர். 3 பேருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், திருப்பூரில் விஷவாயு தாக்கி உயிரிழந்தோரின் குடும்பத்திற்கு தலா ரூ.30 லட்சம் வழங்க சாய ஆலை நிறுவனம் ஒப்பதல் அளித்துள்ளது. வருவாய் அலுவலர் கார்த்திகேயன் தலைமையில் நடந்த முத்தரப்பு அமைதிப் பேச்சுவார்த்தையில் அந்நிறுவனம் ஒப்புதல் அளித்துள்ளது. திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை அடுத்த கரைப்புதூரில் தனியாருக்கு சொந்தமான சாய ஆலையில் உள்ள சாயக்கழிவு நீர் தொட்டியை சுத்தம் செய்ய திருப்பூர் சுண்டமேடு பகுதியை சேர்ந்த சரவணன் (வயது 31), வேணுகோபால் (30) மற்றும் முத்துக்குமார், ஹரிகிருஷ்ணன், சின்னச்சாமி ஆகிய 5 பேர் சென்றனர். அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக தொட்டிக்குள் இறங்கியபோது அவர்களை விஷவாயு தாக்கியது. இதில் 5 பேரும் தொட்டிக்குள் மயங்கி விழுந்தனர். இதில் சரவணன், வேணுகோபால் ஆகியோர் உயிரிழந்தனர். மேலும் மயக்க நிலையில் இருந்த முத்துக்குமார், ஹரி கிருஷ்ணன், சின்னச்சாமி ஆகியோருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# தங்க நகைக்கடன் பெறுவதற்கு புதிய விதிமுறைகள் வெளியீடு

### பொதுமக்கள் கடும் அதிர்ச்சி

**டெல்லி, மே 21-**

தங்க நகைக்கடன் தொடர்பாக ரிசர்வ் வங்கி புதிய விதிகளை வெளியிட்டுள்ளது. இந்த புதிய விதிகளால் பொதுமக்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ரிசர்வ் வங்கி வெளியிட்ட புதிய விதிகள்:- தங்க நகையின் மதிப்பில் 75 சதவீதம் மட்டுமே நகைக்கடன் வழங்கப்படும். எடுத்துக்காட்டாக நகையின் மதிப்பு 100 ரூபாய் என்றால் 75 ரூபாய் வரை மட்டுமே நகைக்கடன் வழங்கப்படும்.

தங்க நகை கடன் வாங்குபவர்கள் நகைக்கு நீங்கள்தான் உரிமையாளர் என்ற ஆதாரத்தை வழங்க வேண்டும். தங்க நகையின் தூய்மைத்தன்மை குறித்து வங்கியிடம் சான்றிதழ் பெற வேண்டும்.

குறிப்பிட்ட வகையிலான தங்கங்களுக்கு மட்டுமே நகைகடன் வழங்கப்படும். நகை 22 காரட் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும். வெள்ளி நகைகளுக்கும் நகைக்கடன் பெறலாம்.

தனிநபர்கள் ஒரு கிலோ தங்க நகை வரை மட்டுமே அடக்கு வகைக்க முடியும். நகைக்கடனாக பெறப்படும் தங்கம் 22 காரட் மதிப்பின் அடிப்படையில் கடன் வழங்கப்படும். நகைக்கடன் ஒப்பந்தத்தில் முழுமையான தகவல் இடம் பெற்றிருக்க வேண்டும். நகைக்கடன் வாங்கியவர் அந்த கடனை திரும்ப செலுத்திய 7 வேலை நாட்களில் நகையை திரும்பி ஒப்படைக்க வேண்டும். 7 வேலை நாட்களில் ஒப்படைக்கவில்லையென்றால் கடன் கொடுத்தவர் (வங்கிகள்) ஒரு நாளைக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் அபராதமாக கொடுக்க வேண்டும்.'என தெரிவிக்கப்பட்டுள்ளது

# 'பெரிய பாய்' என அழைப்பது பிடிக்கவில்லை: ஏ.ஆர்.ரஹ்மான்

**சென்னை, மே 21-**

சமூக வலைதளங்களில் 'பெரிய பாய்' என்ற பெயரில் அழைக்கப்படுவது தனக்கு பிடிக்கவில்லை என்று இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

'தக் லைப்' படத்தை விளம்பரப்படுத்தும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதற்காக ஏ.ஆர்.ரஹ்மானை டிடி பேட்டி எடுத்துள்ளார். அந்தப் பேட்டியில் ''பெரிய பாய் பாட்டுக்கு யார் நோ சொல்வார்கள்'' என்று பேச்சில் குறிப்பிட்டார். அதற்கு ஏ.ஆர்.ரஹ்மான் ''பெரிய பாயா?'' என்று சிரித்தார். உடனே டிடி ''உங்களுக்கு தெரியாதா... சமூக வலைதளத்தில் உங்களுடைய பெயரே அதான்'' என்றார். அதற்கு ஏ.ஆர்.ரஹ்மான் ''வேணாம். எனக்குப் பிடிக்கலை. பெரிய பாய், சின்ன பாய்னு...'' என்று பதில் அளித்துள்ளார். இந்த வீடியோ பதிவு இணையத்தில் பெரும் வைரலாகி வருகிறது. சமூக வலைதளத்தில் பலரும் ஏ.ஆர்.ரஹ்மானை குறிப்பிடும் போது 'பெரிய பாய்' என்றுதான் செல்லமாக கூறுவார்கள். இதைத்தான் தனக்கு பிடிக்கவில்லை என்று கூறியிருக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான்.

### நீட் தேர்வுக்கு பயந்து பலியாக வேண்டாம்:

# மாணவர்களுக்கு இ.பி.எஸ். வேண்டுகோள்

**சென்னை, மே 21-**

நீட் ரத்து நாடகத்திற்கு பலியாக வேண்டாம் என மாணவர்களை எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டார்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; சேலம் சூரமங்கலம் அருகே உள்ள நரசோதிப்பட்டி பகுதியைச் சேர்ந்த மாணவர் கௌதம், நீட் தேர்வு அச்சத்தால் தன் இன்னுயிரை மாய்த்துக்கொண்டதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

ஒரு முறை, ஒரே ஒரு முறை, உங்கள் பெற்றோர்களைப் பற்றி சிந்தித்து பாருங்கள்.

இந்த உலகில் எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன.

உங்களுக்காக பல்வேறு கதவுகள் திறந்து உள்ளன. அவைகளை கண்டறிந்து முன்னேறுங்கள். ஒருபோதும் கைவிடாதே. கௌதமின் பெற்றோருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

### திரைப்பட பாணியில் சம்பவம்:

# லாரியை கடத்திய நபரை பிடிக்க 10 கி.மீ தொங்கியபடியே சென்ற காவலர்

**செங்கல்பட்டு, மே 21-**

10 கிலோமீட்டர் தூரத்திற்கு லாரியில் காவலர் தொங்கிச் சென்ற வீடியோ காட்சி இணையத்தில் வைரலாகி வருகிறது.



செங்கல்பட்டு சுங்கச்சாவடி அருகே கனரக லாரியை நிறுத்திவிட்டு அதன் டிரைவர் டீ சாப்பிடுவதற்காக அருகில் இருந்த கடைக்கு சென்றுள்ளார். அப்போது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் லாரியின் உள்ளே ஏறி லாரியை தேசிய நெடுஞ்சாலை வழியாக சென்னை நோக்கி கடத்தி செல்ல முயன்றுள்ளார். சுதாரித்துக் கொண்ட டிரைவர் லாரியின் பின்னால் ஓடி சென்று பிடிக்க முயன்றபோது பிடிக்க முடியாததால் அருகில் இருந்த இருசக்கர வாகன ஓட்டிகளுடன் சேர்ந்து தேசிய நெடுஞ்சாலையில் வாகனத்தை துரத்திச் சென்றனர்

அப்போது மகேந்திரா சிட்டி சிக்னலில் லாரி நின்றபோது அங்கு பணியில் இருந்த போக்குவரத்து காவலர் முருகன் லாரியில் ஏற முயன்றார். காவலர் உள்ளே ஏற முயன்றதை கவனித்த நபர் லாரியை 10 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஓட்டி சென்றார். அப்போது காவலர் உயிரை பணயம் வைத்து லாரியில் தொங்கிக்கொண்டு சென்ற நிலையில் மறைமலைநகர் சிக்னலுக்கு அருகே போலீசார் லாரியை மடக்கி பிடித்தனர். தொடர்ந்து லாரியை கடத்திய நபரை காவல் நிலையம் அழைத்துச் சென்று தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

# டெல்லி எம்.எல்.ஏ.க்களுக்கான உள்ளூர் மேம்பாட்டு நிதி ரூ.5 கோடியாக குறைப்பு

**புதுடெல்லி, மே 21-**

பா.ஜ.க. தலைமையிலான டெல்லி அரசு, ஆண்டுதோறும் எம்.எல்.ஏ.க்களுக்கு வழங்கும் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியை ரூ.15 கோடியிலிருந்து ரூ.5 கோடியாகக் குறைத்துள்ளது.

கடந்த ஆண்டு அக்டோபரில், டெல்லியில் முந்தைய ஆம் ஆத்மி அரசு, சட்டமன்றத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு, எம்.எல்.ஏ. உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியை ரூ.10 கோடியிலிருந்து ரூ.15 கோடியாக உயர்த்தியது. அதனையடுத்து இந்த ஆண்டு பிப்ரவரியில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி பா.ஜ.க.வால் தோற்கடிக்கப்பட்டது. இந்த சூழலில், டெல்லி அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை வெளியிட்ட சமீபத்திய உத்தரவின்படி, மே 2 அன்று எடுக்கப்பட்ட அமைச்சரவை முடிவின்படி எம்.எல்.ஏ. உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதி, ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஆண்டுக்கு ரூ.5 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வெளியான அரசாணையில் டெல்லியில் உள்ள 70 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தலா ரூ.5 கோடி என ரூ.350 கோடியை அரசாங்கம் ஒதுக்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆம் ஆத்மி ஆட்சியில், 2021-22 மற்றும் 2022-23 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு எம்.எல்.ஏ.வுக்கும் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியாக ரூ. 4 கோடி வழங்கப்பட்டது, இது 2023-24ல் ரூ.7 கோடியாக உயர்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடகாவில் 5 முக்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றம்: ராகுல் காந்தி பெருமிதம்

**பெங்களூரு, மே 21-**

கர்நாடக காங்கிரஸ் அரசு அளித்த 5 முக்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப் பட்டுள்ளதாக ராகுல் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் விஜயநகராவில் நேற்று காங்கிரஸ் சார்பில் பேரணி நடைபெற்றது. இதில் கட்சியின் முக்கிய தலைவர்கள் ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பேரணியில் பேசிய ராகுல் காந்தி, ''கர்நாடகாவில் காங்கிரஸ் அரசு ஆட்சியமைத்து 2 வருடங்கள் ஆகிறது. 5 முக்கிய வாக்குறுதியை நாங்கள் கொடுத்தோம். பா.ஜ.க.வும் மோடியும் காங்கிரஸ் கொடுத்த வாக்கை காப்பாற்றாது என்று கூறினர். ஆனால் 1 கோடி பெண்களுக்கு மாதம் ரூ.2000, ஒரு கோடி குடும்பங்களுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம், 4 கோடி பேருக்கு 10 கிலோ இலவச உணவு தானியங்கள், பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், வேலையில்லா இளைஞர்களுக்கு மாதம் ரூ.3000 உதவித் தொகை ஆகிய 5 முக்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கர்நாடகாவில் நிறைய சமூக மக்கள் சொந்த நிலம் இருந்தும் அதற்கான பத்திர உரிமம் இல்லாமல் இருப்பதாய் நான் அறிந்தேன். இதுகுறித்து கட்சி மூத்த நிர்வாகிகளிடம் பேசினேன். இன்று கர்நாடக அரசு 1 லட்சம் குடும்பங்களுக்கு அவர்களின் நிலத்துக்கான உரிமத்தை வழங்க உள்ளது. அடுத்த 6 மாதங்களில் இது நடந்து முடியும். மேலும், கர்நாடகாவில் 2000 வருவாய் கிராமங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் 500 வருவாய் கிராமங்கள் அறிவிக்கப்பட உள்ளது. கர்நாடகாவில் எல்லோருக்கும் அவரவர் நிலத்துக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்'' என்றார்.

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.70,000-க்கு கீழ் சரிவு

**சென்னை, மே 21-**

சென்னையில் நேற்று (மே 20) 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.45 குறைந்து, ஒரு கிராம் ரூ.8,710-க்கும், பவுனுக்கு ரூ 360 குறைந்து, ஒரு பவுன் ரூ.69,680-க்கும் விற்பனையானது. ஒரு பவுன் விலை ரூ.70,000-க்கு கீழாக மீண்டும் சரிந்துள்ளது நகை வாங்குவோருக்கு நிம்மதி தந்ததுள்ளது. கடந்த சில வாரங்களாக சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப, தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் வருகிறது. கடந்த ஏப்.22-ம் தேதி ஒரு பவுன் தங்கம் ரூ.74,320 ஆக உயர்ந்து, புதிய உச்சத்தை தொட்டது. அதன் பிறகு, தங்கம் விலை ஏற்ற இறக்கமாக இருந்து வருகிறது. அந்த வகையில், நேற்று (மே 20) 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.45 குறைந்து, ஒரு கிராம் ரூ.8,710-க்கும், பவுனுக்கு ரூ.360 குறைந்து, ஒரு பவுன் ரூ.69,680-க்கும் விற்பனையானது.வெள்ளி கிராமுக்கு ரூ.1 குறைந்து , ஒரு கிராம் வெள்ளி ரூ.108-க்கும், ஒரு கிலோ வெள்ளிரூ.1, 08,000-க்கு விற்பனையானது.

# மகாராஷ்டிர அமைச்சரவை விரிவாக்கம்: அமைச்சராக சாகன் புஜ்பால் பதவியேற்பு

**மும்பை, மே 21-**

தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சாகன் புஜ்பால் மகாராஷ்டிர அமைச்சரவையில் அமைச்சராக நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

77 வயதான புஜ்பாலுக்கு மகாராஷ்டிர ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன், துணை முதல்வர்கள் அஜித் பவார் மற்றும் ஏக்நாத் ஷிண்டே மற்றும் பிற மூத்த தலைவர்கள் முன்னிலையில் ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னவீஸ் தனது ஐந்து மாத அமைச்சரவையை நேற்று விரிவுபடுத்தினார். புஜ்பாலின் பதவியேற்புடன் மாநில அரசில் பா.ஜ.க.வைச் சேர்ந்த 19 பேர், சிவசேனாவைச் சேர்ந்த 11 பேர் மற்றும் தேசியவாத காங்கிரஸைச் சேர்ந்த 9 பேர் உள்பட 39 பேர் மகாராஷ்டிர அமைச்சரவையில் உள்ளனர்.

பல ஆண்டுகளாக அரசியல் வாழ்க்கையில் உள்ளவர் சாகன் புஜ்பால். கடந்தாண்டு டிசம்பரில் முதன்முதலாக பட்னவீஸ் தலைமையிலான அமைச்சரவை விரிவுபடுத்தியபோது, சாகன் புஜ்பாலுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை. அமைச்சரவையில் இருந்து அவர் நீக்கப்பட்டார். மாநிலத்தில் முக்கியமான, அனுபவமிக்க தலைவர் நீக்கப்பட்டது பொதுமக்களை ஏமாற்றமடையச் செய்தது. சர்பஞ்ச் சந்தோஷ் தேஷ்முக் கொலை வழக்கில் அவரது நெருங்கிய உதவியாளர் வால்மிக் கரட் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மார்ச் மாதம் உணவு, சிவில் விநியோகம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து தனஞ்சய் முண்டே ராஜிநாமா செய்தார். அவரது ராஜிநாமாவைத் தொடர்ந்து சாகன் புஜ்பால் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....




இட ஒதுக்கீடு மூலம் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் கல்வி மற்றும் அரசு வேலை வாய்ப்பில் எவ்வளவு பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது என்பது குறித்த வெள்ளை அறிக்கையை தமிழக அரசு வெளியிட வேண்டும். அந்த அறிக்கையை நீதியரசர் குரியன் குழுவிடம் வழங்கி ஆய்வுக்கு உட்படுத்துமாறு தமிழக அரசு ஆணையிட வேண்டும்.

- அன்புமணி



பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாத விவகாரத்தில் மத்திய அரசு அரசியல் கட்சிகளிடம் கலந்தாலோசிக்கப்படவில்லை மற்றும் விளக்கவில்லை. பாராளுமன்றம் மற்றும் மக்களிடம் தாக்குதல் குறித்து விளக்கம் அளிக்காமல், மத்திய அரசு வெளிநாட்டு அரசுகளுக்கு விளக்கம் அளிக்க இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

- டி.ராஜா



நீட் தேர்வை ரத்து செய்ய வைப்பதற்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசும் திறந்த மனதுடன் நீட் தேர்வின் பயன்பாடு குறித்து ஆய்வு செய்து அதை ரத்து செய்ய வேண்டும். குறைந்தபட்சம் தமிழகத்திற்கு மட்டுமாவது விலக்களிக்க வேண்டும்.

- ராமதாஸ்



டெல்டா மாவட்டப் பகுதிகளில் பெய்த கனமழையால் வாழை, எள், வெற்றிலை மற்றும் அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் மழைநீரில் நனைந்து சேதமடைந்தன. கடந்த சில நாட்களாக பெய்த திடீர் மழையால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து பயிர்களையும் கணக்கெடுப்பு செய்து விவசாயிகளுக்கு தமிழக அரசு உரிய நிவாரணத்தை வழங்க வேண்டும்.

- ஜி.கே.வாசன்



சிகாமணி 91 வது பிறந்தநாள் விழா சென்னை வியாசர்பாடி மந்தோவாணி உருவச்சிலை அருகே நேற்று கொண்டாடப்பட்டது. மாஸ் டிரஸ்ட் நிறுவனர் எம்ஏ ஜோசப் ஒருங்கிணைத்த இந்த நிகழ்வுக்கு ரவிக்குமார் தலைமை தாங்கினார். இதில் பன்னீர்செல்வம் பிரதர்ஸ் அறக்கட்டளை இயக்குனர் அந்தோணி நெப்போலியன் பங்கேற்று 200 க்கும் மேற்பட்ட முதியோருக்கு தலா 5 கிலோ அரிசி வழங்கினார்.

# அரசு ஊழியர்களை திருமணம் செய்து நகை, பணம் சுருட்டிய கல்யாண ராணி கைது

**சென்னை மே 21-**

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மனைவியை இழந்த அரசு ஊழியர்களாக பார்த்து திருமணம் செய்து நகை, பண மோசடியில் ஈடுபட்ட பலே கல்யாண ராணியை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

கூடுவாஞ்சேரி அடுத்த ஆதனூர் பகுதியை சேர்ந்தவர் பிரதீப். இவரது மனைவி செசிலியா (24). இவர், ஆதனூர் பகுதியை சேர்ந்த வட்டார சுகாதார ஆய்வாளர் வனத்தையன் என்பவரின் மகள். இந்நிலையில், வனத்தையனின் மகள் செசிலியா கடந்த 2 நாட்களுக்கு முன், மணிமங்கலம் காவல் நிலையத்தில், கோவையை சேர்ந்த மடோனா (47) என்ற பெண் மீது புகார் அளித்தார்.அதில், கடந்த 1993ம் ஆண்டு ஊட்டி, மஞ்சனக்கோரை பகுதியை சேர்ந்த வனத்துறை அதிகாரி மகேந்திரன் என்பவரை மடோனா திருமணம் செய்துள்ளார். அவர் இறந்த பிறகு, கடந்த 2014ம் ஆண்டு திருவள்ளூரை சேர்ந்த, மனைவியை இழந்து தனியாக வசித்த ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரி கனகராஜ் என்பவரை மடோனா 2வதாக திருமணம் செய்துள்ளார். பின்னர் அவரை ஏமாற்றி நகை, பணத்தைப் பறித்துக் கொண்டு விவாகரத்து பெற்றுள்ளார். இதைத் தொடர்ந்து, கடந்த 2021ம் ஆண்டு மனைவியை இழந்து தனியே வசித்த ஆதனூர் பகுதியை சேர்ந்த வட்டார சுகாதார ஆய்வாளரும், எனது தந்தையுமான வனத்தையனை போலி ஆவணங்கள் மூலம் தேவாலய பாதிரியாரை ஏமாற்றி, குழந்தை இயேசு ஆலயத்தில் 3வதாக மடோனா திருமணம் செய்து மோசடியில் ஈடுபட்டுள்ளார். மேலும், தனது தந்தையின் சொத்துகளை அபகரிக்கும் வகையில், அடியாட்களுடன் வந்து மிரட்டி, வீட்டை உடைத்து ரகளையில் ஈடுபட்டுள்ளார். அவர்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செசிலியா புகார் அளித்திருந்தார். புகாரின்பேரில், மணிமங்கலம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, மனைவியை இழந்து தனியே வசிக்கும் அரசு ஊழியர்களாக பார்த்து திருமணம் செய்து கொண்டு நகை, பணம், சொத்து மோசடியில் ஈடுபட்ட கோவையை சேர்ந்த பிரபல கல்யாண ராணி மடோனாவை நேற்று கைது செய்து, சிறையில் அடைத்தனர். தற்போது, கைது செய்யப்பட்ட மடோனா மீது, ஏற்கனவே அரசு கருவூலத்தை ஏமாற்றி பணம் பெற்றதாக உதகை போலீசில் வழக்கு நிலுவையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



காஞ்சிபுரம்மாவட்டகலெக்டர்அலுவலகத்தில்மக்கள்குறைத் தீர்க்கும் கூட்டம் நடந்தது. மாற்றுத்திறனாளி பெண்ணுக்கு திறன்பேசி கருவியை, மாவட்டக் கலெக்டர் கலைச்செல்வி வழங்கினார். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மலர்விழி உடனிருந்தார்.

# எடப்பாடி கே.பழனிசாமி முதல்வராக பதவி ஏற்கும் நாள் வெகு தூரம் இல்லை: முன்னாள் அமைச்சர் பா.பென்ஜமின் பேச்சு



**சென்னை மே 21-**

மதுரவாயல் சட்டமன்ற தொகுதி 146 வது வார்ட்டில் அதிமுக பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மதுரவாயல் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.இந்த கூட்டத்திற்கு கிழக்கு பகுதி செயலாளர் ஏ.தேவதாஸ் தலைமை வகித்தார். இந்த கூட்டத்தில் 146 வது வட்ட செயலாளர்கள் எம்.பி.தென்றல்குமார், எம்.பாரதி ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான பா.பென்ஜமின் கலந்து கொண்டு பேசியதாவது:-அதிமுக பொது செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி ஆனைப்படி இந்த கூட்டத்தின் நோக்கம் வருகின்ற சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதால் அந்த தேர்தலில் 9 பேர் கொண்ட பூத் கமிட்டி உறுப்பினர்கள் பணிகள் சிறப்பானது.நீங்கள் செய்ய வேண்டிய பணிகள் 3 முக்கியமான பணிகள் ஆகும் .அதில் முதலில் இப்போது இருந்தே பூத் கமிட்டி பணிகள் தொடங்க வேண்டும் .

வாக்காளர்கள் பட்டியலை சரிபார்க்கு வேண்டும் .வாக்காளர்கள் குடிபெயர்ந்து உள்ளனரா? அல்லது யார் யார் எங்கு வசிக்கிறன்றனர் என்று பார்க்கவேண்டும்.ஒரு பூத் கமிட்டி உறுப்பினர்கள் 100 முதல் 120 வரை வாக்காளர்களை பற்றி அறிந்து இருக்க வேண்டும்.

9 பேர்கொண்ட பூத் கமிட்டி உறுப்பினர்கள் சுமார் 1080 வாக்காளர்கள் பற்றி அறிந்து இருக்க வேண்டும்.ஒரு பூத்தில் வாக்காளர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அதற்கு ஏற்ப பூத் கமீட்டி உறுப்பினர்கள் வாக்காளர்களை பற்றி அறிந்து இருக்க வேண்டும்.ஒவ்வொரு வாக்காளர்களிடம் அதிமுக ஆட்சியில் செய்த சாதனைகளை எடுத்த சொல்ல வேண்டும்.குறிப்பாக மறைந்த முதல்வர்கள் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா, ஆகியோர் முதலமைச்சராக இருந்த போது ஏழை எளிய மக்களுக்கு செய்த சாதனைகளை எடுத்த கூற வேண்டும் .இதே போல மக்கள் மனதில் வாழ்ந்து வருகின்ற பொது செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமியின் ஆட்சியின் போது செய்த சாதனை சொல்ல வேண்டும் இந்த பணிகளை திறம்பட செய்தால் வருகின்ற சட்டமன்ற தேர்தலில் அதிமுக அமொக வெற்றி பெறும் .மீண்டும் எடப்பாடி கே.பழனிசாமி தமிழகத்தின் முதல்வராக ஆவது உறுதி. இதை யாராலும் தடுக்க முடியாது. இவ்வாறு பா.பென்ஜமின் பேசினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட தேர்தல் பொறுப்பாளர் ராயபுரம் ஆர்.மனோ, மாவட்ட துணை செயலாளர் கா.சு.ஜனார்ததனம்,பொருளாளர் ராஜா (எ) பேரழகன், சென்னை மாநகராட்சி எதிர்கட்சி துணை தலைவர் நெற்குன்றம் டி.சத்தியநாதன், ஏ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் என்ஜினியர் ஜெ.துரைராஜ், எம் ஆர்.முனியன், டெனிசன்,தெற்கு வட்ட நிர்வாகிகள் எஸ்.சரவணன், மீனாசீனிவாசன், எம்.தினேஷ்குமார், சி.சரவணன், ஆர்.பாண்டியம்,டி.மணி, சீதா,நீலா சாந்திசுப்பையயா, வி.ராஜன், எஸ்.சிவகுமார், எல்லப்பன் ஆர்.குமார், தீனதயாளன், வடக்கு வட்ட நிர்வாகிகள் சி.மதன்ராஜ், பார்ஸ்போர்ட் எம்.பி.எஸ்.இளங்கோ, எம்.ஆறுமுகம், தாயளன், மாணிக்கம், குபேந்திரன், அ.உ.நாரயணசாமி, பாலாஜி, லோகு, வேலாயுதம் ,ஜி.சுரேஷ்,பூபாலன்,மற்றும் பலர் உள்ளனர்

# கொட்டிவாக்கத்தில் வீட்டில் 60 சவரன் நகை திருட்டு: நேபாள தம்பதி கைது

**சென்னை மே 21-**

சென்னை நீலாங்கரை சரகம், நீலாங்கரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட lb நகர், மூன்றாவது தெரு என்ற முகவரியில் மகேஷ் குமார் என்பவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். அவரது வீட்டில் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வீட்டின் பாதுகாப்பிற்காக நேபாள நாட்டை சேர்ந்த ரமேஷ் மானசாகி மற்றும் அவரது மனைவி பினிதா சாகி ஆகியோர்கள் வேலைக்குச் சேர்ந்து வீட்டின் பாதுகாப்பு மற்றும் வீட்டின் இதர வேலைகளை செய்து வந்துள்ளனர். இந்நிலையில் மகேஷ் குமார் கடந்த 14ந் தேதி அன்று வீட்டை பூட்டி விட்டு ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள காவேரிப்பாக்கம் என்ற ஊருக்கு சென்று குல தெய்வ வழிபாடு முடித்து இரவு 9.00 மணிக்கு வந்து பார்த்தபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பீரோவிலிருந்த 60 சவரன் தங்க நகைகள், வெள்ளி பொருட்கள் மற்றும் பணம் ரூபாய்.50,000/- ஆகியவை கொள்ளையடிக்கப்பட்டு இருந்தது தெரியவந்தது. இது குறித்து மகேஷ்குமார் நீலாங்கரை குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவிட்டதின் பேரில் கூடுதல் காவல் ஆணையர் சட்டம் ஒழுங்கு தெற்கு மற்றும் இணை ஆணையர் தெற்கு ஆகியோரின் மேற்பார்வையில் அடையாறு காவல் மாவட்ட துணை ஆணையர் நேரடி கண்காணிப்பில் நீலாங்கரை உதவி ஆணையர் மற்றும் காவல் ஆய்வாளர் தலைமையில் தனிப்படை அமைக்கப் பட்டது.

தனிப்படை போலீசாரின் முதற் கட்ட விசாரணையிலும், சிசிடிவி கேமரா பதிவுகளின் அடிப்படையிலும் இந்த குற்ற செயலில் ஈடுபட்டது மேற்படி வீட்டில் வேலை செய்து வந்த ரமேஷ் மானசாகி, அவரது மனைவி பினிதா சாகி மற்றும் இருவர் என தெரியவந்தது. அதனடிப்படையில் தனிப்படை போலீசார் லக்னோ, பெங்களூர், பழியாகலான் மற்றும் நேபாளம் எல்லையான கோறி பண்டா, ககோரோலா, ஆகிய இடங்களுக்கு விரைந்து சென்று விசாரித்து பின்னர் சொத்துக்களை மீட்க தக்க புலன் வைத்ததில் நேற்று அண்ணா நகர் சாந்தி காலனி சந்திப்பில் சென்ட்ரல் ரயில்வே நிலையம் செல்வதற்காக வந்த 1.ரமேஷ் மானசாகி, அவரது மனைவி 2.பினிதா சாகி, ஆகிய இருவரை கைது செய்தனர். மேலும் இவ்வழக்கில் விரைந்து செயல்பட்டு தகுந்த புலன்களுடன் துப்புத் துலக்கி களவு போன சொத்துக்களை மீட்ட நீலாங்கரை சரக உதவி ஆணையர், ஆய்வாளர், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் அடங்கிய தனிப்படையினரை காவல் உயர் அதிகாரிகள் வெகுவாக பாராட்டினார்கள்.

# கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி தொடக்கம்



**கும்மிடிப்பூண்டி,மே.21-**

கும்மிடிப்பூண்டி தாலுகாவில் உள்ள வருவாய் கிராமங்களுக்கு 1434ம் ஆண்டு பசலி ஆண்டுக்கான ஜாமாபந்தி கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியர் சுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு வட்டாட்சியர் புகழேந்தி மற்றும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் ராமசிவம் கிராம வருவாய் ஆய்வாளர் திவ்யா ஆகியோர் முனினிலை வகித்தனர்.இதில் சிறப்பு அழைப்பாளராக பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் ரவிக்குமார் கலந்துகொண்டு மனுக்களை பெற்றனர்.நிலம் சொத்து விவகாரம் தொடர்பாக மக்களுக்கு இருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒரே கூட்டத்தில் ஆட்சித்தலைவர் மூலம் தீர்வுகாணப்படும்.இதில் நேற்று நடைபெற்ற கிராமங்கள் பூதூர் தர்காஸ்து கண்டிகை வாண்ராசி குப்பம் நேமலூர் சிறுவாடா மாதர்பாக்கம் மனெலூர் செந்தில்பாக்கம் போந்தவாக்கம் பல்லவாடா கண்ணம்பாக்கம் ஆகிய கிராமங்களிலிருந்து 175 மனுக்கள் பெறப்பட்டன. கும்மிடிப்பூண்டி வட்டத்தில் ஜாமாமந்தி நேற்று துவங்கி மே 29ஆம் தேதி முடிவடைகிறது. இதில் 61 ஊராட்சிகளையும் சேர்ந்த பொதுமக்கள் மனுக்களை அளித்து தீர்வு காணலாம்.

# கிண்டியில் போக்குவரத்து மாற்றம்

**சென்னை மே 21-**

போக்குவரத்து நெரிசலை குறைக்க கிண்டி காந்தி மண்டபம் சந்திப்பில் நாளை முதல் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட உள்ளது. மத்திய கைலாஷ் நோக்கி வரும் வாகனங்கள் காந்தி மண்டபம் மேம்பாலத்தில் மட்டுமே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. காந்தி மண்டபம் சர்வீஸ் சாலையில் செல்லும் வாகனங்கள் காந்தி மண்டபம் சந்திப்பில் இடதுபுறம் திரும்ப வேண்டும். சி.எல்.ஆர்.ஐ. பேருந்து நிறுத்தம் ஏற்கெனவே உள்ள இடத்தில் இருந்து சற்று முன்னோக்கி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

# வீட்டின் அருகே மது குடிப்பதை தட்டி கேட்ட பெண்ணை தாக்கிய 3 பேர் கைது

**.சென்னை மே 21-**

சென்னை, புது வண்ணாரப்பேட்டை, ஜீவா நகர் பகுதியில் ஜான்சி, என்பவர் தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். ஜான்சி கடந்த 17ந் தேதி அன்று இரவு, மேற்படி ஜான்சியின் வீட்டின் வெளியே சில நபர்கள் மது குடித்துக் கொண்டு, தகராறு செய்து கொண்டிருந்தபோது, சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்த ஜான்சி, மேற்படி மது அருந்திக் கொண்டிருந்த நபர்களிடம் வேறு இடம் சென்று மது அருந்துமாறு கூறியுள்ளார். அப்போது மேற்படி நபர்களில் ஒருவர் காலி மது பாட்டிலை எடுத்து ஜான்சி மீது வீசியுள்ளார். பின்னர் மேற்படி நபர்கள் சேர்ந்து, ஜான்சியை தகாத வார்த்தைகள் பேசி, கொலைமிரட்டல் விடுத்து, அங்கிருந்து தப்பிச் சென்றனர். இது குறித்து ஜான்சி, புது வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் பாரதிய நியாய சன்ஹிதா சட்டம் மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் ஆகிய சட்டப் பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர். புதுவண்ணாரப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.டேவிட், 2.பார்த்திபன், 3.சிவச்சந்திரன், ஆகிய 3 பேரை கைது செய்தனர். விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரிகள் டேவிட் மற்றும் பார்த்திபன் ஆகிய இருவரும் புது வண்ணாரப்பேட்டை காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என்பதும், எதிரி டேவிட் மீது திருட்டு, வழிப்பறி, அடிதடி என 9 குற்ற வழக்குகளும், எதிரி பார்த்திபன் மீது கஞ்சா, அடிதடி உட்பட 7 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# ஓட்டேரி அருகே பிளேடை விழுங்கிய ரவுடிக்கு சிகிச்சை

**சென்னை மே 21-**

சென்னை ஓட்டேரி நம்மாழ்வார்பேட்டையில் பிளேடை விழுங்கிய ரவுடி ஜெயக்குமார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தர்பூசணி வியாபாரி முரளியிடம் ரூ.17,000 பறித்த சம்பவத்தில் ரவுடி ஜெயக்குமார், அவரது கூட்டாளி சதீஷ் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட ரவுடி ஜெயக்குமார் திடீரென பிளேடை விழுங்கிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.



சென்னை பெருநகர காவல்துறை சார்பில் காவலர் குறை கேட்பு முகாம் ஆணையர் அருண் தலைமையில் நடந்தது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு தங்களை குறைகளை தெரிவித்தனர்.

# கூலித்தொழிலாளியிடம் கத்தியை காட்டி பணம் பறித்தவர் கைது

**சென்னை மே 21-**

சென்னை, சௌகார்பேட்டை, மின்ட் தெருவில் வசித்து வரும் ராமய்யா, என்பவர் திருமண மண்டபத்தில் கூலி வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 17ந் தேதி அன்று காலை, ஏழுகிணறு, அம்மன் கோயில் தெருவில் உள்ள ஒரு டீக்கடையில் டீ குடித்துக் கொண்டு இருந்தபோது, அங்கு வந்த ஒரு நபர் மேற்படி ராமய்யாவிடம் மது அருந்த பணம் கேட்டுள்ளார். ராமய்யா பணம் இல்லை என்று கூறியபோது, ராமய்யாவை கையால் தாக்கி, கத்தியைக் காட்டி மிரட்டி, அவர் வைத்திருந்த பணம் ரூ.2,000/- பறித்துக் கொண்டு, கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றார். இது குறித்து ராமய்யா, ஏழுகிணறு குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

ஏழுகிணறு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி ரமேஷ் (எ) தொங்கா ரமேஷ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து பணம் ரூ.1,000/- மீட்கப்பட்டு, குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி ரமேஷ் (எ) தொங்கா ரமேஷ் மீது ஏற்கனவே திருட்டு, வழிப்பறி உட்பட 6 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

# தனியார் நிறுவனத்தில் செல்போன் திருடியவர் கைது

**சென்னை மே 21-**

சென்னை, இராயபுரம், ஆஞ்சநேய நகர், 7வது தெருவில் வசித்து வரும் குமார் பாபு, என்பவர் எஸ்பிளனேடு,ஜோன்ஸ் தெருவில் உள்ள அமா ஸ்டீல் நிறுவனத்தில் டிரைவராக வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 30ந் தேதி அன்று மாலை மேற்படி நிறுவனத்தின் மேஜையில் செல்போனை வைத்து விட்டு உறங்கியுள்ளார். பின்னர் சிறிது நேரம் கழித்து எழுந்து பார்த்த போது, அவரது செல்போன் காணாமல் போனது தெரியவந்தது. இது குறித்து குமார் பாபு எஸ்பிளனேடு குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

எஸ்பிளனேடு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் திருட்டில் ஈடுபட்ட உமர் (எ) உமர் பாரூக், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி உமர் (எ) உமர் பாரூக் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# துரைப்பாக்கம் பகுதியில் உதவி ஆய்வாளர் மீது தாக்குதல்: மூவர் கைது

**சென்னை மே 21-**

சென்னை பெருநகர காவல், துரைப்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வரும் ஜெபசிங் என்பவர் கடந்த 18 ந் தேதி அன்று மாலை கொட்டிவாக்கம், பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள நடைபாதை பானிபூரி கடை அருகே ரோந்து பணியிலிருந்த போது, அங்கு 3 பேர் சேர்ந்து ஒருவரிடம் தகராறு செய்து தாக்கியுள்ளனர். இதனை கண்ட உதவி ஆய்வாளர் ஜெபசிங் சண்டையை விலக்கிவிட்டு, அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தி 3 நபர்களையும் எச்சரித்த போது, அவர்கள் உதவி ஆய்வாளர் ஜெபசிங்கை அவதூறாக பேசி கையால் தள்ளி, தாக்கி சப்தமிட்டு மிரட்டி விட்டு அங்கிருந்து தப்பிச்சென்றனர். இது குறித்து உதவி ஆய்வாளர் ஜெபசிங் துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். துரைப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படையினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.விஜய், 2.சதிஷ்குமார், 3.ரஞ்சித்குமார், ஆகிய மூவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புல்லட் இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

# பெண்ணிடம் செல்போன் பறித்தவர் கைது

**சென்னை மே 21-**

சென்னை, ஏழுகிணறு, பரமானந்தா தெருவில் வசித்து வரும் மகாலட்சுமி, என்பவர் உறவினர் இல்ல திருமணத்தில் கலந்து கொள்வதற்காக, தனது வீட்டிலிருந்து பேருந்து நிலையம் நோக்கி பேரக்ஸ் சந்து வழியாக நடந்து சென்று கொண்டிருந்தபோது, எதிரில் டியோ இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் மகாலட்சுமி கையில் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு தனது இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றார். இது குறித்து, மகாலட்சுமி ஏழுகிணறு காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஏழுகிணறு காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி செல்போன் பறிப்பில் ஈடுபட்ட முருகன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மீட்கப்பட்டது. குற்றச் செயலுக்கு பயன்படுத்திய டியோ இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி முருகன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# மதுபாட்டில்கள் பதுக்கி வைத்து விற்றவர் கைது

**சென்னை மே 21-**

மயிலாப்பூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் மயிலாப்பூர், பிடாரியம்மன் கோயில் தெருவில் கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த அப்துல்லா, என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 40 மதுபாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் எதிரி அப்துல்லா மயிலாப்பூர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 9 கொலைமுயற்சி, வழிப்பறி, அடிதடி என மொத்தம் சுமார் 29 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# தி.மலையில் அனைத்து பள்ளி பேருந்துகளை மாவட்ட அளவிலான கூட்டாய்வு குழுவினருடன் கலெக்டர் க.தர்ப்பகராஜ் ஆய்வு



**திருவண்ணாமலை மே.21-**

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள காவலர் குடியிருப்பு மைதானத்தில் போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்புத் துறை சார்பில் திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட அனைத்து பள்ளி பேருந்து வாகனங்களையும் மாவட்ட அளவிலான கூட்டாய்வு குழுவினரால் ஆய்வு செய்யும் பணியினை கலெக்டர் க.தர்ப்பகராஜ் நேற்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு மோட்டார் வாகான (பள்ளி வாகனங்கள் மீதான ஒழுங்கு மற்றும் கட்டுப்பாடு) சிறப்பு விதிகள் 2012-ன்படி பள்ளி மாணவர்கள் பள்ளி பேருந்துகளில் சிரமமின்றியும் விபத்தின்றியும் பயணம் செய்யும் வண்ணம் பள்ளி பேருந்துகள் ஆண்டுக்கு ஒருமுறை கூட்டாய்வுக்கு உட்படுத்தி தகுதிச் சான்று பெற்ற பின்னரே பொது சாலையில் இயக்கப்பட வேண்டும். 2025-2026 ஆம் ஆண்டிற்கு திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட அனைத்து பள்ளி வாகனங்களும் வருவாய் கோட்டாச்சியர், வட்டாரப் போக்குவரத்து அலுவலர், காவல் துணை கண்காணிப்பாளர், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர், மோட்டார் வாகான ஆய்வாளர் நிலை உள்ளிட்ட அலுவலர்களை கொண்ட மாவட்ட அளவிலான இடை நிலைக் குழுவினரால் 200க்கும் மேற்பட்ட பள்ளி பேருந்துகள் கூட்டாய்வு செய்யப்பட்டது.

அனைத்து கல்வி நிறுவன பேருந்துகளுக்கும் அனுமதி சீட்டு நடப்பில் இருக்க வேண்டும். பொதுச் சாலையில் இயக்குவதற்கு தரமான வாகனம் என நடப்பில் உள்ள தகுதிச் சான்று பெற்ற பின்னரே பொது சாலையில் இயக்கப்பட வேண்டும். நடப்பில் உள்ள காப்பு சான்று ஆய்வுக்கு இருக்க வேண்டும். நடப்பு சாலை வரி செலுத்திய பின்னரே வாகனம் பொது சாலையில் இயக்கப்பட வேண்டும். கல்வி நிலைய பேருந்து இயக்கும் போது ஓட்டுனர், உதவியாளர் சீருடையில் இருக்க வேண்டும். நடப்பு புகை சான்று ஆய்வுக்கு இருக்க வேண்டும். மோட்டார் வாகான விதி மற்றும் சட்டத்திற்கு உட்பட்டு கல்வி நிலைய பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். வாகனத்தின் முன் பக்கம் ஒரு கேமரா பொருத்தப்பட வேண்டும்.

வாகனத்தினை பின் நோக்கி இய்யக்கப்படும் பின்புறத்தை முழுவதுமாக ஓட்டுனர் பார்க்கும் வண்ணம் வாகனத்தின் பின்புறத்தில் ஒரு கேமரா பொருத்தப்பட வேண்டும். வாகனத்தின் உட்புறமாக சிசிஜிக்ஷி கேமரா மற்றும் நிறிஷி கருவி பொருத்தப்பட வேண்டும். நடப்பில் உள்ள வாகனன்களின்றி பள்ளி வாகனம் பொது சாலையில் இயக்கப்படுமானால் அவற்றை மோட்டார் வாகான சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு சிறைப்பிடிப்பதோடு வாகனத்தின் அனுமதிச்சீட்டு ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பள்ளி பேருந்துகள் மாணவர்களை அழைத்துச் செல்வதால் இதில் தனி கவனம் செலுத்த வேண்டும் என அனைத்து பள்ளி நிர்வாகத்திற்கும் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட ஆய்வுக்குழுவினரால் அனுமதிக்கப்பட்ட பள்ளி வாகனங்கள் மட்டுமே பள்ளி குழந்தைகளை அழைத்துவர உபயோகப்படுத்த வேண்டும்.

திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட அனைத்து தனியார் பள்ளி பேருந்துகளையும் கூட்டாய்வுக்கு உட்படுத்தப்படும் எனவும், மேலும் திருவண்ணாமலை மாவட்டத்தில் சென்ற ஆண்டு பள்ளி வாகனங்கள் எவ்வித விபத்துக்களும் இல்லாமல் பாதுகாப்பாக இயக்கப்பட்டது. அதன்படி இந்த ஆண்டும் பள்ளி குழந்தைகளையும் ஒவ்வொரு வாகன ஓட்டுநர்களும் தனது சொந்த குழந்தைகளாக நினைத்து வாகனங்களை அரசு வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றி வாகனங்களை இயக்க வேண்டும் என்று கலெக்டர் க.தர்ப்பகராஜ், கேட்டுக் கொண்டார்கள்.

மேலும் பள்ளி பேருந்து வாகன ஓட்டுநர்களுக்கு மருத்துவக்குழுக்கள் மூலம் விபத்துகளின் போது மேற்கோள்ள வேண்டிய முதலுதவி சிகிச்சைகள் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இந்த ஆய்வின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எம்.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ராம்பிரதீபன், கோட்டாட்சியர் ராஜ்குமார், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் கே.கருணாநிதி, சிவக்குமார் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் பழனி, வட்டார போக்குவரத்து அலுவலர் நேர்முக உதவியாளர் பொன். சேகர் கண்காணிப்பாளர் ஆர். சுப்பிரமணி மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.7.15 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 25 வகுப்பறைகள் கொண்ட கட்டடத்தை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து, அமைச்சர் ஆர்.காந்தி புதிய வகுப்பறை கட்டடத்தில் குத்து விளக்கேற்றினார். உடன் கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா மற்றும் பலர் உள்ளனர்.

# அரக்கோணத்தில் ஒன்றிய குழு கூட்டம்



**அரக்கோணம் மே 21**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம்ஊராட்சி ஒன்றிய குழு கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது கூட்டத்திற்கு ஒன்றிய குழு தலைவர் நிர்மலா சௌந்தர் தலைமை தாங்கினார் ஒன்றிய ஆணையாளர்கள் பிரபாகரன் தாச பிரகாஷ் மற்றும் துணைத் தலைவர் புருஷோத்தமன் முன்னிலை வகித்தனர் ஒன்றிய குழு உறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர் உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர் மன்றத்தில் வைக்கப்பட்ட பல்வேறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன அதில் 374 மன்ற பொருள் ஒத்திவைக்கும் படி ஒன்றிய குழு உறுப்பினர் நரேஷ் வலியுறுத்தி பேசினார்

# அரக்கோணத்தில் பலத்த மழை: இரட்டை கண் பாலத்தினுள் தண்ணீர் சூழ்ந்ததால் போக்குவரத்து முடக்கம்

**அரக்கோணம் மே 21**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் நகரின் ஒரு பகுதியாக பழனி பேட்டை பகுதி உள்ளது இந்த பகுதி யுடன் முக்கியமான மற்றொரு பகுதியை இணைக்கும் ரயில்வே நிர்வாகத்திற்கு சொந்தமான இரட்டை கண் பாலம் குறுக்கே அமைந்துள்ளது நேற்று மாலை 3 மணி நேரம் கனத்த மழை அரக்கோணத்தில் பெய்தது

இதனால் தாழ்வான பாலத்தினுள் மழை நீர் சூழ்ந்தது இதனால் இரு பகுதி போக்குவரத்து துண்டித்தது இதனால் வாகன போக்குவரத்துடன் நடை சாரியாகவும் செல்ல முடியாமல் தடை ஏற்பட்டு பொதுமக்கள் பெரிதும் அவதிக்கு உள்ளானார்கள் அதிலும் ஆம்புலன்ஸ் செல்ல முடியாமல் நகரை சுற்றி சென்ற அவலநிலைக்கும் தள்ள பட்டது எனவே நீண்ட காலமாக மக்கள் அவதிக்கு உட்படுத்தப்படும் பாலத்தினுள் மழைநீர் உடனே அப்புறபடுத்தும் பணியை நகராட்சி நிர்வாகமோ அல்லது ரயில்வே நிர்வாகம் எடுத்து செய்ய முன்வர வேண்டுமென சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்

# ரத்தினகிரி பாலமுருகன் கோவிலில் வைகாசி விசாக பிரம்மோற்சவ விழா குறித்து ஆலோசனை கூட்டம்



**ராணிப்பேட்டை, மே, 21-**

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த ரத்தினகிரி பாலமுருகன் கோவிலில் வைகாசி விசாகம் மூன்றாம் ஆண்டு பிரம்மோற்சவ விழா பல்துறை அலுவலர்கள் ஆலோசனைக்கூட்டம் திருக்கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

ரத்தினகிரி பாலமுருகன் கோவிலில் வைகாசி விசாகம் பிரமோற்சம் தேரோட்டம் விழா வரும் 31ம்தேதி சனிக்கிழமை தொடங்கி ஜூன் மாதம் 11ம்தேதி புதன்கிழமை வரை நடைபெறுகிறது.

இதில் வேலூர்,ராணிப்பேட்டை மாவட்டத்தை சேர்ந்த பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர். எனவே பொதுமக்களுக்கான பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடுகள் குறித்து நடைபெற்ற ஆலோசனை கூட்டத்திற்கு ராணிப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் ராஜராஜன் தலைமை தாங்கினார். பாலமுருகன் கோவில் பரம்பரை அறங்காவலர் பாலமுருகனடிமை சுவாமிகள் முன்னிலை வகித்தார். செயல் அலுவலர் சங்கர் வரவேற்றார்.

கூட்டத்தில் பிரமோற்சவ விழாவில் நாள்தோறும் உற்ஸவர் ஊர்வலம்,தேர்திருவிழா உள்ளிட்ட நாட்களில் பொதுமக்களுக்கு காவல் துறை பாதுகாப்பு நடவடிக்கை , தடையற்ற மின்சாரம், ஆற்காடு மற்றும் வேலூரிலிருந்து பொதுமக்களின் நலன் கருதி சிறப்பு பேருந்து, குடிநீர்வசதி, தீயணைப்பு மற்றும் மீட்பு படை வாகனம், சுகாதார வசதிகள்,தூய்மை பணிகள் குறித்து கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அரசுக்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த கூட்டத்தில் பாலமுருகனடிமை சுவாமிகள் அன்னதானஅறக்கட்டளை பொறுப்பாளர் சிவனார் அமுது. கோவில்அர்ச்சகர் பிரசாத் குருக்கள், மற்றும் பல்துறை அலுவலர்கள், கிராம நாட்டாண்மைதாரர்கள், திருக்கோவில் பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



**புதுச்சேரி காங்கிரஸ் சார்பில் ராஜீவ் காந்தியின் நினைவு நாளையொட்டி அவரது நினைவாக இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து புதுச்சேரி வந்தடைந்த அணையா ஜோதியைஐ.என்.டி.எஸ்.சி.தலைவர்பாலாஜிதலைமையில் காங்கிரஸ் தலைவர் வைத்தியலிங்கம் எம் பி, முன்னாள் முதல்வர்நாராயணசாமிவரவேற்றுவழி அனுப்பிவைத்தனர்.**

# தி.மலை தாலுகா அலுவலகத்தில் வீட்டுமனை பட்டா கோரி ஜமாபந்தியில் மனுக்கள் குவிந்தன

## விரைந்து நடவடிக்கை எடுக்க கலெக்டர் க.தர்ப்பகராஜ் உத்தரவு



**திருவண்ணாமலை, மே.21-**

திருவண்ணாமலை தாலுகா அலுவலகத்தில் 2வது நாளாக நேற்று நடைபெற்ற ஜமாபந்தியில் (வருவாய் தீர்வாயம்) வீட்டு மனை பட்டா கோரி மனுக்கள் குவிந்தன விரைந்து மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க கலெக்டர் க.தர்ப்பகராஜ் உத்தரவிட்டார்.

ஜமாபந்தி 2வது நாளாக நேற்று கலெக்டர் க.தர்ப்பகராஜ் தலைமையில் நடைபெற்றது. தாசில்தார் சு.மோகனராமன் வட்ட வழங்கல் அலுவலர் மு.தியாகராஜன் சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார் உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்க தலைமையிடத்து துணை தாசில்தார் பி.செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றார்.

திருவண்ணாமலை வடக்கு உள்வட்டத்தைச் சேர்ந்த திருவண்ணாமலை கீழ்நாத்தூர் ஆடையூர் வேங்கிக்கால் சின்னகாங்கியனூர் நல்லான்பிள்ளைபெற்றாள் பள்ளிகொண்டாப்பட்டு சம்பந்தனூர் நொச்சிலை சோ. கீழ்நாச்சிப்பட்டு வாணியந்தங்கல் மலப்பாம்பாடி சு.பள்ளியம்பட்டு சாவல்பூண்டி கீழ்அணைக்கரை மேலத்திக்கான் அடிஅண்ணாமலை கோசாலை தேவனந்தல் அய்யம்பாளையம் அத்தியந்தல் ஆணாய்பிறந்தான் காவேரியாம்பூண்டி பண்டிதப்பட்டு கனதம்பூண்டி உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கான கணக்குகள் சரி பார்க்கப்பட்டது.

நிகழ்ச்சியில் புதிதாக வீட்டு மனை பட்டா, நிலப் பட்டா, பட்டா பெயர் மாற்றம், குடும்பஅட்டை, வீடு அளவை, நில அளவை உள்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்த மனுக்களை திருவண்ணாமலை கலெக்டர் க.தர்ப்பகராஜிடம் பொதுமக்கள் வழங்கினர்.

இதில் திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் து.பரமேஸ்வரன், வருவாய் ஆய்வாளர் எஸ்.ஏங்கல்ஸ்பிரபு கிராம நிர்வாக அலுவலர்கள் பாலசந்தர் எம்.மாதவன், வெங்கடாஜலம் பாலமுருகன் ராகுல் சங்கர் விஜயராஜ் மற்றும் கிராம உதவியாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மண்டல துணை தாசில்தார் திருநாவுக்கரசு நன்றி கூறினார்.

தமிழ்நாடு அரசு
மல்லூர் முதல் நிலை பேரூராட்சி, சேலம் மாவட்டம்
ந.க.எண்.89/ 2025 / அ1 மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 19.05.2025

சிறப்பு நிதித் திட்டம் (SPECIAL FUND) நிதி 2025-2026 திட்டத்தின் கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள இரண்டு உறைகள் (Two Cover system) கொண்ட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வேலைகள் விபர அட்டவணை

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் | செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை (ரூபாயில்) (Only for Civil Works) | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1. | Restoration BT Road @ Ward No. 12 From Trichy Main Road to Post Officer To Puttrukannu and Ward No. 08 Mariyamman Kovil to Kandhasami Kovil Road, Ward NO: 09 Mariyamman Kovil to Old Police Station Road, Ward No: 07 and 1 From Vengampatti Vinayagar Temple to Aanaipaalli Road, Ward No: 03 Panamarathupatti Road (Pichampalyam) to Pachaayi Kovil Road in Mallur Town Panchayat. | 121.00 | 2,42,000/- | Class-I | 180 நாட்கள் |

1) செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் தகுதியான ஒப்பந்தாரர்களிடமிருந்து மின்னனு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது. 2) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த இணையதள முகவரிகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். 3) மின்னனு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

4, முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| அ | ஒப்பந்தப்புள்ளி நமூனா இறக்கம் செய்தல் | 19.05.2025 தேதி முதல் 04.06.2025 மாலை 3.00 மணி |
| ஆ | முன் கலந்தாய்வு கூட்டம் | 30.05.2025 |
| இ | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 04.06.2025 மாலை 3.00 மணி |
| ஈ | ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 04.06.2025 பிற்பகல் 3.30 மணி |

5) ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும். 6) ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை மல்லூர் முதல்நிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்த கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
மல்லூர் முதல்நிலை பேரூராட்சி, சேலம் மாவட்டம்.
செ.ம.தொ.இ /2387/ ஒப்பந்தப்புள்ளி /2025

தமிழ்நாடு அரசு
கன்னியாகுமரி மாவட்டம், மருங்கூர் இரண்டாம் நிலை பேரூராட்சி
தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2025-2026
ந.க.எண். 22/ 2025 / அ1 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்:16.05.2025

கன்னியாகுமரி மாவட்டம், மருங்கூர் இரண்டாம்நிலை பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2025-26 திட்டத்தின் கீழ் ரூ. 161.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 02.06.2025 திங்கள் கிழமை பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலக கடிகாரப்படி) இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ.டெண்டரிங் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு செயல் அலுவலர் அல்லது அவரால் அதிகாரம் பெற்றவரால் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் 02.06.2025 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை https://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதர விவரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
மருங்கூர் இரண்டாம்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.
செ.ம.தொ.இ /2378/ ஒப்பந்தப்புள்ளி / 2025

# நேரடி கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வழங்கிய விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய கோரி உழவர் பேரியக்கத்தினர் ஆர்ப்பாட்டம்



**திருவண்ணாமலை மே.21-**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரகம் முன்பு தி.மலை தெற்கு மாவட்டம் தமிழ்நாடு உழவர் பேரியக்கம் மற்றும் பாமக சார்பில் அரசு நேரடி கொள்முதல் நிலையங்களுக்கு நெல் வழங்கிய விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யக் கோரியும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடனை 6 மாதத்திலிருந்து ஒரு வருட காலம் கடன் நீட்டிப்பு வழங்க கோரி நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பாமக தெற்கு மாவட்ட செயலாளர் கே.பக்தபவச்சலம் தலைமை தாங்கினார். பாமக மேற்கு மாவட்ட செயலாளர் இல.பாண்டியன் முன்னிலை வகிக்க தமிழ்நாடு உழவர் பேரியக்க மாவட்ட செயலாளர் கோ.சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டு தமிழ்நாடு உழவர் பேரியக்க மாநில தலைவர் ஆலய மணி மாநில செயலாளர் வேலுச்சாமி ஆகியோர் கோரிக்கைகளை மாவட்ட நிர்வாகம் உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தி சிறப்புரையாற்றினர்.இந்த ஆர்ப்பாட்டத்தில் வழங்கிடுவழங்கிடு தமிழக அரசே வழங்கிடு விவசாயிகளின் கொள்முதல் செய்த நெல்லுக்கு பணம்பட்டுவாடா வழங்கிடு என வலியுறுத்தி உழவர் பேரியக்கத்தினர் கோஷமிட்டனர். இதில் மாநில செயற்குழு உறுப்பினர்கள் இரா.காளிதாஸ் அ.வே.பிரசாத் பழமண்டி செந்தில்குமார் வன்னியர் சங்க மாவட்ட செயலாளர் க.நாராயணசாமி மகளிரணி மாநில துணை தலைவி ஜெ.கஸ்தூரி மாவட்ட பொருளாளர் சௌ.வீரம்மாள் மாவட்ட அமைப்பு செயலாளர் கே.ஆர்.முருகன் மற்றும் உழவர் பேரியக்க நிர்வாகிகள் பாமக நிர்வாகிகள் விவசாயிகள் 300-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். முடிவில் உழவர் பேரியக்க மாவட்ட தலைவர் அக்ரி ஆறுமுகம் நன்றி கூறினார்.

ஆறுமுகநேரி சிறப்புநிலை பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்
ந.க.எண்: 29/2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 12.05.2025

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி சிறப்புநிலை பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2025-2026 இன் கீழ் ரூ. 160.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து முழு விவரங்களுடன் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:
அ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் - 28.05.2025 மாலை 3.00 மணி வரை
ஆ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் - 28.05.2025 மாலை 3.30 மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.

தலைவர்
ஆறுமுகநேரி சிறப்புநிலை பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்
செ.ம.தொ.இ/2392/ஒப்பந்தப்புள்ளி/2025
செயல் அலுவலர்
ஆறுமுகநேரி சிறப்புநிலை பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

# கீழ்மாம்பட்டு அம்மச்சார் அம்மன் கோவிலில் 501 பால்குடம் ஊர்வலம்: ஏராளமானோர் பங்கேற்பு

**செஞ்சி மே 21.**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுக்கா கீழ்மாம்பட்டு கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீஅம்மச்சார் அம்மன், ஸ்ரீசெல்வவிநாயகர், ஸ்ரீஸ்ரீநிவாச பெருமாள் கோவிலின் 25ஆம் ஆண்டு பிரஹ்மோத்ஸவ திருவிழாவும் 16ஆம் ஆண்டு ரதோத்ஸவ திருத்தேர் திருவிழா நேற்று19 ம் தேதி திங்கட்கிழமை அன்று காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் துவங்கியது இதை முன்னிட்டு ஸ்ரீஅம்மச்சார் அம்மன், ஸ்ரீசெல்வவிநாயகர், ஸ்ரீஸ்ரீநிவாச பெருமாள் மூலவர்களுக்கு சிறப்பு அபிஷேகமும் தீபாரதனையும் நடைபெற்றது

இரண்டாம் நாள் திருவிழா இன்று 20 ம்தேதி செவ்வாய்கிழமை நடைபெற்றது இதை முன்னிட்டுநேற்று

காலை 10.30 மணிக்கு பத்மினி தேவி மூர்த்தி தலைமையில் பெண்கள் பால்குடம் எடுத்து முக்கிய வீதிகள் வழியாக வந்து மூலவர் , ஸ்ரீசெல்வவிநாயகர், ஸ்ரீஸ்ரீநிவாச பெருமாள் ஸ்ரீஅம்மச்சார் அம்மனுக்கு பால் அபிஷேகமும் தொடர்ந்து சிறப்பு அபிஷேகமும் மாகா தீபாரதனையும் நடந்தது.

இதில் முன்னால் மத்திய ரயில்வே துறை இணை அமைச்சர் ஏ. கே.மூர்த்தி,தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கிருஷ்ணன் ரெட்டியார்,மற்றும் அனைத்து உபயதார்கள் கிராம பொதுமக்கள் ஏராளமான பக்தர்கள்கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

நாளை 21 ம் தேதி புதன் கிழமை மாலை 5 மணிக்கு ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீசீனுவாச பெருமாளுக்கு திருகல்யாணமும் நடைபெறுகிறது தொடர்ந்து 23ம் தேதி வெள்ளிக்கிழமை 6 மணிக்கு அம்மச்சார் அம்மன் கோவிலில் திருவிளக்கு பூஜை நடைபெறுகிறது இதை முன்னிட்டு காலையில் ஸ்ரீஅம்மச்சார் அம்மன், ஸ்ரீசெல்வவிநாயகர், ஸ்ரீஸ்ரீநிவாச பெருமாள் மூலவர்களுக்கு சிறப்பு அபிஷேகமும் தீபாரதனையும் மாலை 6 மணிக்கு அம்மச்சார் அம்மன் கோவிலில் பத்மினி தேவி மூர்த்தி தலைமையில் திருவிளக்கு பூஜைகள் நடைபெறுகிறது 24ம் தேதி சனிக்கிழமை இரவு10மணிக்கு பூ பல்லக்கில் ஐந்து சுவாமி வாண வேடிக்கையுடன் வீதியுலா நடைபெறுகிறது .

முக்கிய தேர் திருவிழா வரும் 25ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் நடைபெறுகிறது

அன்று அதிகாலையில் ஸ்ரீஅம்மச்சார் அம்மன், ஸ்ரீசெல்வவிநாயகர், ஸ்ரீஸ்ரீநிவாச பெருமாள் மூலவர்களுக்கு சிறப்பு அபிஷேகமும் தீபாரதனையும் காலை 6 மணிக்கு சிறப்பு யாகமும் பூர்ணாஹூதியும் யாத்ரா தானமும் தீபாரதனையும் காலை 7 மணிக்கு தேர் சக்கர பூஜையும் அம்மன் தேர் பிரவேசமும் காலை 8.30 மணிக்கு திரு தேர் வடம் பிடித்தல் நடைபெறுகிறதுவிழாவிற் கான ஏற்பாடுகளை முன்னால் மத்திய ரயில்வே துறை இணை அமைச்சர் ஏ.கே.மூர்த்தி மற்றும் அனைத்து உபயதார்கள் கிராம பொது மக்கள் இளைஞர்கள் செய்து வருகின்றனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தமிழ்நாடு அரசு, நங்கவள்ளி பேரூராட்சி, சேலம் மாவட்டம்
ந.க.எண்: 31/2024 மின்னனு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு நாள். 15.05.2025

தமிழ்நாடு நகர்புற சாலைகள் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் (கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம்) கூடுதல் நிதி 2025-2026 திட்டத்தின் கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள இரண்டு உறைகள் (Two Cover system) கொண்ட மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

வேலை விபர அட்டவணை

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ (இலட்சத்தில்) | செலுத்த வேண்டிய தொகை முன் வைப்புத் தொகை (ரூபாயில்) (Only for Civil Works) | ஒப்பந்ததாரரின் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | Restoration of CC Road With Strom Water Drain With Culvert at Ward No : 01 Passakuttai ,Seerangankattu Valavu 1st Cross W To E Ward No : 2 Palakkanur 1st Cross Street ,Palakkanur 2nd Cross From E To W ,Palakkanur 3rd Cross From Palakaranur Main Road To E To W ,Palakkaranur Main Street To RHS 1st Cross From W To E ,Palakkaranur Main Street To RHS 1st Cross From W To E Ward No :3 Kadakaraiyanur 1st Cross From W To E ,Kuttapattaiyan Street 1st Cross From S To N , Kuttapattaiyan Street 2nd Cross From W T E ,Kuttapattaiyan Street 2nd Cross From W T E Ward No : 04 Karattupatti Main Road, Ward No : 05 Savadi Theru 1st Cross From N To S,Tharamangalam Main Road PACB S To N & E To W Side , Vadakkuratha Veethi RHS 1st Cross From N To S ,Ward No : 6 Vadakkuratha Veethi N Side Idayar Theru S To N, Kammalar Theru 1st Cross W To E ,Bajanai Kovil Main Street From Vadakku Radha Veethi S To N ,Ward No : 07 Thoppu Theru 2nd Cross Road , Ward N0 : 09Kuyavar Theru Main Road 2nd Cross N To S , Pathrakaliyamman Kovil Main Road LHS ,Mettur Main Road Eshwaran Kovil Road RHS 1st Cross E To W ,Mettur Main Road Eshwaran Kovil Road LHS 1st Cross W To E ,Bathrakaliyamman Kovil Main Road RHS 1st Cross S To N ,Bathrakaliyamman Kovil Theru To Valluvar Theru Road LHS 1st Cross ,Bathrakaliyamman Kovil Theru To Valluvar Theru Road LHS 2nd Cross E To W ,Valluvar Theru Main Road RHS 1st Cross W To E ,Valluvar Theru Main Road RHS 2nd Cross W To E ,Ward No : 10 Theppekulam From Side To Mettur Main Road E To W , Town Panchayat Office Back Side RHS S To N,Town Panchayat Office LHS E To W ,Town Panchayat Office Back Side E To W , Ward No : 12 Lakshmi Narasimma Kovil RHS 1st Cross N To S ,Anjahara Street Padikkal Street ,Anjahara Street Padikkal Street 1st Cross S To N ,Ward No :13 Tharamangalam Main Road RHS 2nd Cross N To S , Ward No : 14 Samattiyur Road N To E,Vanavasi To Soragai Main Road to Samattiyur Via RHS 1st Cross , Vanavasi To Soragai Main Road to Samattiyur Via RHS 1st Cross W To E Side ,Nangavalli To Vanavasi Main Road RHS Vayakkadu Road E To W,Ward No : 15 Samattiyur Burial Ground Compost Road E To W Area in Nangavalli Town Panchayat. | 222.90 | 445800/- | Class -I | 180 நாட்கள் |

1) செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் தகுதியான ஒப்பந்தாரர்களிடமிருந்து மின்னனு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது. 2) ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த இணையதள முகவரிகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம். 3) மின்னனு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

4.முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| அ) ஒப்பந்தப்புள்ளி நமூனா இறக்கம் செய்தல் | 15.05.2025 தேதி முதல் 04.06.2025 மாலை 3.00 மணி |
| ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் | 04.06.2025 மாலை 3.00 மணி |
| இ) ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் | 05.06.2025 பிற்பகல் 3.30 மணி |

3.ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.
2.ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை நங்கவள்ளி பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்த கொள்ளலாம்.

தலைவர்,
நங்கவள்ளி பேரூராட்சி, சேலம் மாவட்டம்
செ.ம.தொ.இ / 2359/ ஒப்பந்தப்புள்ளி / 2025
செயல் அலுவலர்,
நங்கவள்ளி பேரூராட்சி, சேலம் மாவட்டம்

## மைனதானத்தில் மோதிக் கொண்ட சம்பவம்:
# அபிஷேக் - திக்வேஷ்க்கு அபராதம்; ஒரு போட்டியில் விளையாட தடை



**மும்பை, மே 21-**
ஐதராபாத் வீரர் அபிஷேக் சர்மா மற்றும் லக்னோ வீரர் திக்வேஷ் ரதி இருவரும் மைதானத்தில் மோதிக் கொண்ட நிலையில், இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**ஐதராபாத் வெற்றி...**
நடப்பு ஐ.பி.எல். தொடரின் லீக் சுற்றின் 61-வது போட்டி லக்னோவின் எக்காளா மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு (மே 19) நடைபெற்றது. இந்தப் போட்டியில் ஐதராபாத் அணி வெற்றி பெற்ற நிலையில், தோல்வியடைந்த லக்னோ அணி ஃபிளே-ஆப் சுற்றுக்கு முன்னேற முடியாமல் தொடரிலிருந்து வெளியேறியது.

**வாக்குவாதம்...**
இந்தப் போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸில் சிறப்பாக விளையாடிய அபிஷேக் சர்மா 20 பந்துகளில் 59 ரன்கள் எடுத்த நிலையில், லக்னோ வீரர் திக்வேஷிடம் விக்கெட்டை பறிகொடுத்தார். அபிஷேக் வெளியேறும் போது தனது வழக்கமான பாணியில் திக்வேஷ் கையெழுத்து கொண்டாட்டத்தில் ஈடுபட இருவருக்கும் இடையே வாக்குவாதமாக மாறியது.

**சமாதானம்...**
கள நடுவர்கள் மற்றும் அணி வீரர்கள் சேர்ந்து இருவரையும் விலக்கிவிட்டனர். மேலும், அபிஷேக் சர்மா, திக்வேஷ் ரதியின் முடியைப் பிடிப்பது போலவும் சைகை காட்டினார். போட்டி முடிந்ததும் இருவரும் சமாதானமாக மாறி, கை கொடுத்துக் கொண்டனர். பிசிசிஐ துணைப் பொதுச் செயலரும், காங்கிரஸ் எம்பியுமான ராஜீவ் சுக்லாவும் இருவரிடமும் சிறிது நேரம் இதுபற்றி பேசி சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார்.

**அபராதமும், தடையும்...**
இந்த நிலையில், கிரிக்கெட் திடலில் மோதிக் கொண்ட லக்னோ வீரர் திக்வேஷ் ரதிக்கு போட்டிக் கட்டணத்தில் 50 சதவிகித அபராதமும், ஒரு போட்டியில் விளையாடுவதற்கு தடையும் விதிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி 5 தகுதியிழப்பு புள்ளிகள் பெற்றதால், அடுத்து நடைபெறும் குஜராத்துக்கு எதிரான போட்டியில் விளையாடமாட்டார். ஐதராபாத் வீரர் அபிஷேக் சர்மாவுக்கு 25 சதவிகிதமும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

**புதிதில்லை...**
இதுபோன்று அபராதம் பெறுவதோ அல்லது சர்ச்சைகளில் சிக்குவது திக்வேஷுக்கு புதிதொன்றும் கிடையாது. இதற்கு முன்னதாக, பஞ்சாப் மற்றும் மும்பை இந்தியன்ஸுக்கு எதிரான போட்டியிலும் இது போன்ற கொண்டாட்டத்தில் ஈடுபட்டதால் முறையே 25 மற்றும் 50 சதவிகிதம் அபராதம் விதிக்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

## 61-வது லீக்கில் ஐதராபாத் அபார வெற்றி:
# வெளியேறியது லக்னோ அணி

**லக்னோ, மே 21-**
ஐதராபாத் வெற்றி காரணமாக பிளேஆப் சுற்று வாய்ப்பை இழந்த லக்னோ அணி பரிதாபமாக வெளியேறியது.

**205 ரன்கள் குவிப்பு...**
ஐ.பி.எல். தொடரின் 61-வது போட்டி நேற்று லக்னோவில் நடைபெற்றது. இதில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ்-சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின. இப்போட்டியில் டாஸ் வென்ற சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி கேப்டன் கம்மின்ஸ் டாஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் களமிறங்கிய லக்னோ அணி 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 205 ரன்கள் குவித்துள்ளது. அதிகபட்சமாக மார்ஷ் 65 ரன்களும் மார்க்ரம் 61 ரன்களும் அடித்தனர்.

**அபிஷேக் ஆட்டநாயகன்...**
இதனையடுத்து, 206 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஐதராபாத் அணி 18.2 ஓவர்கள் முடிவில் 206 ரன்கள் அடித்து வெற்றி பெற்றது. அதிரடியாக விளையாடிய அரைசதம் அடித்த அபிஷேக் சர்மா ஆட்டநாயகன் விருதை வென்றார்.

**லக்னோ வெளியேறியது...**
இப்போட்டியில் தோல்வி முடிந்ததன் மூலம் பிளே ஆப் சுற்று வாய்ப்பை இழந்த லக்னோ வெளியேறியது. இதுவரை குஜராத் டைட்டன்ஸ், பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ், பஞ்சாப் கிங்ஸ் ஆகிய அணிகள் பிளேஆப் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. எஞ்சிய ஒரு இடத்துக்கு மும்பை, டெல்லி அணிகள் போட்டி போடுகின்றன.

## ஐ.பி.எல்-ல் அசத்தும் கே.எல்.ராகுல்:
# இந்திய அணியில் இடம் பெற வாய்ப்பு?


**புதுடெல்லி, மே 21-**
ஐ.பி.எல்-ல் தொடர்ந்து அசத்தி வரும் கே.எல்.ராகுல் இந்திய அணியில் இடம் பெற வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

**ஒரு இடத்திற்கு போட்டி...**
10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த தொடரில் இதுவரை நடந்துள்ள லீக் ஆட்டங்களின் முடிவில் பெங்களூரு, குஜராத், பஞ்சாப் அணிகள் பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறி உள்ளன. லக்னோ, கொல்கத்தா, சென்னை, ராஜஸ்தான், ஐதராபாத் அணிகள் தொடரில் இருந்து வெளியேறின. மீதமுள்ள ஒரு இடத்திற்கு மும்பை மற்றும் டெல்லி இடையே போட்டி நிலவுகிறது.

**கே.எல்.ராகுல் அபாரம்...**
நடப்பு ஐ.பி.எல். தொடரில் டெல்லி அணிக்காக ஆடி வரும் கே.எல்.ராகுல் சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தி வருகிறார். அவர் இதுவரை 11 போட்டிகளில் ஆடி 493 ரன்கள் குவித்துள்ளார். கேஎல்.ராகுல் கடைசியாக ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற டி20 உலககக்கோப்பை தொடரில் இந்திய அணிக்காக ஆடி இருந்தார். ஏறக்குறைய அவருடைய சர்வதேச டி20 கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்து விட்டதாகவே கருதப்பட்டது. அதன் பின்னர் இந்திய டி20 அணியில் இடம் பிடிக்க கடுமையான போராடி வருகிறார்.

**இந்திய அணியில் வாய்ப்பு...**
இந்நிலையில், தற்போதைய ஐ.பி.எல். தொடரில் சிறப்பாக ஆடி வரும் கே. எல்.ராகுலுக்கு மீண்டும் இந்திய டி20 அணியில் வாய்ப்பு கொடுக்க பி.சி.சி.ஐ விரும்புவதாக செய்திகள் வெளியாகி உள்ளன. கே.எல்.ராகுல் எல்லா இடங்களிலும் விளையாடுவதாலும், விக்கெட் கீப்பர் ஆகவும் இருப்பதாலும், பி.சி.சி.ஐ இன்னொரு வாய்ப்பைக் அவருக்கு கொடுக்க விரும்புவதாக கூறப்படுகிறது. இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் சில தினங்களில் வெளியாகலாம் என கூறப்படுகிறது.

## ஜெர்சி நம்பராக 12-ஐ தேர்வு செய்தது ஏன்?
# சி.எஸ்.கே. வீரர் பிரெவிஸ் விளக்கம்




**சென்னை, மே 21-**
சி.எஸ்.கே. அணியில் 12-ம் எண் ஜெர்சியை தேர்வு செய்தது ஏன் என பிரெவிஸ் விளக்கமளித்துள்ளார்.

**ஆறுதல் வெற்றிக்காக...**
ஐ.பி.எல். தொடரில் டெல்லியில் உள்ள அருண் ஜெட்லி ஸ்டேடியத்தில் நேற்று நடைபெற்ற 62-வது லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின. முதலில் இந்த ஆட்டம் சென்னை சேப்பாக்கத்தில் நடக்க இருந்தது. ஏற்கனவே பிளே-ஆப் சுற்று வாய்ப்பை இழந்து விட்ட இவ்விரு அணிகளும் ஆறுதல் வெற்றிக்காக மல்லுக்கட்டின.

**நம்பிக்கை நட்சத்திரம்...**
முன்னதாக நடப்பு சீசனில் சென்னை அணியில் இடம் பெற்றிருந்த குர்ஜப்னீத் சிங் காயம் காரணமாக விலகினார். அவருக்கு பதிலாக தென் ஆப்பிரிக்காவை சேர்ந்த பிரெவிஸ் மாற்று வீரராக சென்னை நிர்வாகம் ஒப்பந்தம் செய்தது. அந்த வாய்ப்பில் சிறப்பாக செயல்பட்டு வரும் பிரெவிஸ் சென்னை அணியின் வருங்கால நம்பிக்கை நட்சத்திரமாக மாறியுள்ளார்.

**12-ம் நம்பர் ஜெர்சி...**
சென்னை அணியில் பிரெவிஸ் 12-ம் நம்பர் கொண்ட ஜெர்சியை அணிந்து விளையாடி வருகிறார். ஆனால் தென் ஆப்பிரிக்க அணிக்காக விளையாடிய போதும் சரி, ஐ.பி.எல்.-ல் மும்பை இந்தியன்ஸ் தரப்பில் விளையாடிய போதிலும் சரி அவர் 17-ம் நம்பர் கொண்ட ஜெர்சி அணிவது வழக்கம். ஆனால் அவர் ஏன் தற்போது 12-ம் நம்பர் பொறித்த ஜெர்சியை அணிந்து விளையாடுகிறார்? என்பது ரசிகர்கள் மத்தியில் கேள்வியை எழுப்பியது.

**ஏப்ரல் 12ம் தேதி...**
இதற்கான காரணம் குறித்து பிரெவிஸ் பேசிய வீடியோவை சி.எஸ்.கே. நிர்வாகம் தங்களது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளது. அந்த பதிவில் பேசியுள்ள பிரெவிஸ், "ஏப்ரல் 12ம் தேதி தான், என்னை அணியில் சேர்த்துக்கொள்ள விரும்புவதாக சி.எஸ்.கே.விடம் இருந்து அழைப்பு வந்தது. அதனால்தான், எனது ஜெர்சி நம்பரை '12' ஆக வைத்துள்ளேன்." என்று கூறியுள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## நாட்டில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் 58 கோடி மக்களுக்கு இலவச சிகிச்சை
### பிரதமர் நரேந்திரமோடி தகவல்

**புதுடெல்லி, மே 21-**
ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் 58 கோடி மக்களுக்கு இலவச சிகிச்சை வழங்கப்படுவதாக பிரதமர் மோடி தெரிவித்தார்.
உலக சுகாதார கூட்டமைப்பின் 78-வது அமர்வு ஜெனிவாவில் நடைபெற்றது. இதில், காணொலி காட்சி வாயிலாக பிரதமர் மோடி கலந்து கொண்டு உரையாற்றினார்.
அப்போது அவர் பேசியதாவது:- உலக சுகாதாரத்தின் தொலைநோக்கு பார்வையை இந்தியா வலுவாக எதிரொலிக்கிறது. உலகின் மிகப்பெரிய சுகாதார காப்பீட்டுத் திட்டமான ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை செயல்படுத்துகிறோம். இது 58 கோடி மக்களுக்கு இலவச சிகிச்சையை வழங்குகிறது. ஆயிரக்கணக்கான சுகாதார கட்டமைப்புகள் இந்தியாவில் உள்ளன. எங்களுடைய கட்டணமில்லா தொலை மருத்துவச் சேவை 34 கோடிக்கும் அதிகமான ஆலோசனைகளை வழங்கியுள்ளது.
இந்தியாவின் அணுகுமுறை அளவிடக்கூடிய மற்றும் நிலையான மாதிரிகளை வழங்குகிறது. எங்கள் கற்றல்களையும் சிறந்த நடைமுறைகளையும் உலகத்துடன், குறிப்பாக உலகளாவிய தென்பகுதி நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். உலகிற்கு யோகாவை வழங்கிய நாட்டிலிருந்து, அனைத்து நாடுகளையும் பங்கேற்க அழைக்கிறேன். வேதங்களிலிருந்து ஒரு பிரார்த்தனையுடன் நான் முடிக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## சீமான் வசைபாடாத ஆட்கள் இருந்தால் சொல்லுங்கள்: அமைச்சர் சேகர்பாபு

**சென்னை, மே 21-**
சீமான் வசைபாடாத ஆட்கள் இருந்தால் சொல்லுங்கள். அவருக்கு வாழ்த்து தெரிவிக்கிறோம் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபுவிடம், தமிழகத்தில் சாலைகள், உள்கட்டமைப்பு சரியில்லை என்று தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு சேகர்பாபு, தமிழிசை பாண்டிச்சேரியில் இருந்து வந்தவர். அங்கு தள்ளாடி இருந்தவர்களை பார்த்துட்டு கவர்னராக வந்தவர் அவர். அதனால அவருக்கு எதை பார்த்தாலும் தள்ளாட்டமாவே தெரிகிறது. தமிழிசை ஏதாவது பேசிக்கொண்டு தான் இருப்பார். நீங்கள் நின்று கொண்டு இருக்கும் இந்த சாலை எப்படி தரமானதாக இருக்கிறது என்று நீங்கள் அவரிடம் அடுத்த முறை கேள்வி கேளுங்கள் என்றார்.
இதனிடையே, தி.மு.க. துரோகி, காங்கிரஸ் எதிரின்னு நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளது குறித்து கேட்டதற்கு, அவர் வசைபாடாத ஆள் யாராவது இருந்தால் அடையாளம் காட்டுங்கள். அவருக்கு தினந்தோறும் தான் மட்டும் தான் புத்தன். மற்றவர்கள் அத்தனை பேரும்... என் வாயால் சொல்லக்கூடாது. அவர் வசைபாடா ஆட்கள் யாராவது இருந்தால் சொல்லுங்கள் அவருக்கு வாழ்த்து தெரிவிக்கிறோம் என்றார்.

## அரக்கோணம் ஒன்றிய தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் நீக்கம்

**சென்னை, மே 21-**
அரக்கோணம் ஒன்றிய தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். கல்லூரி மாணவியின் புகாரைத் தொடர்ந்து தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் இந்த நடவடிக்கை எடுத்துள்ளார். இந்நிலையில் தெய்வசெயலுக்கு பதிலாக கவியரசு என்பவர் அரக்கோணம் ஒன்றிய தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில், ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் மத்திய ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் தெய்வா (எ) தெய்வச்செயல் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக,
ம.கவியரசு என்பவர் , அந்தப் பொறுப்பில் நியமிக்கப்படுகிறார். எற்கனவே நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் இவருடன் இணைந்து கழகப் பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அயர்லாந்து வீரர்கள் விலகல்

வெஸ்ட் இண்டீஸ் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் செய்து மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் டி20 தொடரில் விளையாடவுள்ளது. இதில் இரு அணிகளுக்கும் இடையேயான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரானது இன்று முதல் தொடங்கவுள்ளது. இந்நிலையில் இப்போட்டிக்கு முன்னதாக அயர்லாந்து அணி பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.
அதன்படி வெஸ்ட் இண்டீஸ் தொடருக்கான அயர்லாந்து அணியில் இடம்பிடித்திருந்த முக்கிய ஆல்ரவுண்டர் கர்டிஸ் கேம்பர் மற்றும் அணியின் அனுபவ வேகப்பந்து வீச்சாளர் கிரேக் யங் ஆகியோர் காயமடைந்ததை தொடர்ந்து இருவரும் இந்த ஒருநாள் தொடரில் இருந்து விலகியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அயர்லாந்து ஒருநாள் அணியில் அறிமுக ஆல் ரவுண்டர் ஜோர்டன் நீல் மற்றும் பேட்டர் ஸ்டீபன் தொஹனி ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## அழுதேனா? சூர்யவன்ஷி விளக்கம்

10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பல இளம் வீரர்கள் அறிமுகமாகி சிறப்பான செயல்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றனர். குறிப்பாக ராஜஸ்தான் அணியில் அறிமுகமாகிய 14 வயதே ஆன வைபவ் சூர்யவன்ஷி அனைவரது மத்தியிலும் பாராட்டுகளை பெற்றுள்ளார். லக்னோவுக்கு எதிரான 36-வது லீக் ஆட்டத்தில் ஐ.பி.எல். தொடரில் அறிமுகம் ஆன வைபவ் சூர்யவன்ஷி சந்தித்த முதல் பந்திலேயே சிக்சர் அடித்து கெரியரை அதிரடியாக தொடங்கினார்.
இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "நான் எப்போது அழுதேன்? அங்கிருந்த மின் விளக்குகள் மற்றும் எல்.இ.டி. திரைகளைப் பார்த்தேன். அதிலிருந்து வந்த பிரகாசமான வெளிச்சம் என்னை அடிக்கடி சிமிட்ட வைத்தது. அதனால் கண்களை தேய்த்துக்கொண்டே வெளியேறினேன். ஆனால் நான் அழுகிறேன் என்று மக்கள் நினைத்தார்கள். உண்மையில் நான் அழவில்லை'' என்று கூறினார்.

## பேட்மிண்டன்: ஸ்ரீகாந்த் வெற்றி

பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்ட மலேசியா மாஸ்டர்ஸ் சர்வதேச பேட்மிண்டன் போட்டி கோலாலம்பூரில் இன்று தொடங்கியது. இந்த தொடர் வரும் 25ம் தேதி வரை நடக்கிறது. இந்த தொடரில் நேற்று முதல் தகுதி சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.
இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற தகுதி சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், தைவானின் ஹூவாங் யு காய் உடன் மோதினார். இந்த போட்டியின் முதல் செட்டை 9-21 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த ஸ்ரீகாந்த், ஆட்டத்தின் அடுத்த இரு செட்களை 21-12, 21-6 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். இந்த வெற்றியின் மூலம் ஸ்ரீகாந்த் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றார்.



**முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலை தொடர்ந்து இந்தியா மேற்கொண்ட ஆப்ரேசன் சிந்தூர் காரணமாக, ஜம்மு-காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் உயர்கல்வி பயில சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் தமிழ்நாடு திரும்ப இயலாத நிலையில், துரித நடவடிக்கை மேற்கொண்டு பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்ததற்காக அம்மாணவ, மாணவியர் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.**

## நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க
# வரும் 23-ம் தேதி டெல்லி முதல்வர் ஸ்டாலின் பயணம்

**சென்னை, மே 21-**
வரும் 24-ம் தேதி டெல்லியில் நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
மத்திய அரசின் நிதி நிர்வாகம் தொடர்பான நிதி ஆயோக்கூட்டம் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த 2015-ல் திட்டக்குழுவுக்கு மாற்றாக நிதி ஆயோக் உருவாக்கப்பட்டது. நிதி ஆயோக் தலைவராக பிரதமர் மோடி இருக்கிறார். இந்நிலையில் நடப்பாண்டு நிதி ஆயோக் கூட்டம் மே 24-ல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் அனைத்து மாநில முதல்வர்கள், யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநர்கள், முக்கிய பொறுப்புகளை வகிக்கும் மத்திய அமைச்சர்கள் பங்கேற்கிறார்கள்.
தொடர்ந்து, இந்த கூட்டத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பங்கேற்பார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் 23-ம் தேதி இரவு டெல்லி செல்லவிருப்பதாகக் கூறப்படுகிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சிவங்கை, சிங்கம்புணரி கல்குவாரி விபத்தில்
# உயிரிழந்த 5 பேர் குடும்பத்திற்கு 4 லட்சம் ரூபாய் நிவாரண நிதி
### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**திருப்பத்தூர், மே 21-**
சிவங்கை மாவட்டம் சிங்கம்புணரி கல்குவாரி விபத்தில் உயிரிழந்த 5 பேர் குடும்பத்திற்கு 4 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.
சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே எஸ். எஸ்.கோட்டையை அடுத்த மல்லாங்கோட்டை கிராமத்தில் மேகா மெட்டல் குவாரி என்ற பெயரில் கல்குவாரி ஒன்று கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறது. இங்கு சுற்று வட்டார பகுதிகைளை சேர்ந்த 50-க்கும் மேற்பட்டோர் தினக்கூலி தொழிலாளர்களாக வேலை பார்த்து வருகிறார்கள்.
இந்த நிலையில் நேற்று காலையில் வழக்கம் போல் பணிக்கு வந்த தொழிலாளர்கள் 10-க்கும் மேற்பட்டோர் பாறைகளை உடைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது மண் சரிந்ததில் குவாரியில் வேலை பார்த்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மண்ணில் புதைந்தனர். இதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த 5 பேர் குடும்பத்திற்கு ரூ.4 லட்சம் இழப்பீடு வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-
சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், மல்லாக்கோட்டை கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான கல் குவாரியில் இன்று (20.5.2025) காலை எதிர்பாராதவிதமாக பாறை மற்றும் மண் சரிந்து விழுந்த விபத்தில் கல் குவாரியில் பணி செய்துகொண்டிருந்த முருகானந்தம், ஆறுமுகம், கணேசன், ஆண்டிச்சாமி மற்றும் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஹர்ஷித் ஆகிய ஐந்து நபர்கள் உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.
விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் உடனடியாக மாவட்ட ஆட்சியரைத் தொடர்புகொண்டு மீட்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுறுத்தியதோடு, கூட்டுறவுத் துறை அமைச்சரை உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பி மீட்பு நடவடிக்கைளை மேற்கொள்ளவும் அறிவுத்தினேன். மேலும், இவ்விபத்தில் காயமடைந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மைக்கேல் என்பவருக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.
இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என கூறியுள்ளார்.

## 1350-வது சதய விழாவை முன்னிட்டு திருச்சியில்
# பெரும்பிடுகு முத்தரையர் சிலைக்கு அ.இ.அ.தி.மு.க. சார்பில் மரியாதை
### எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, மே 21-**
அ.தி.மு.க. சார்பில் வருகிற 23-ம்தேதி திருச்சி ஒத்தக்கடையில் அமைந்துள்ள பெரும்பிடுகு முத்தரையர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.;
அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ் மொழியைக் காப்பதிலும், தமிழ் மொழியின் சிறப்புகளை கல்வெட்டுகளில் பதித்து அவை, காலத்திற்கும் நிலைபெறச் செய்ததிலும் பேரரசர் பெரும்பிடு முத்தரையர் ஆற்றிய பணிகளை வரலாறு பதிவு செய்கிறது. கன்னித் தமிழை வளர்த்தவர்களில் முதன்மையாக இடம் பெறுபவர் பெரும்பிடுகு முத்தரையரே ஆவார்.
தன் வாழ்நாளில் 16 பெரும் போர்களில் தோல்வியே காணாத மாபெரும் அதிதீரன் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையருக்கு, ஜெயலலிதா, 1996-ம் ஆண்டு தமது முதலாவது ஆட்சிக் காலத்தில், திருச்சி மாநகரின் மையப் பகுதியில் உருவச் சிலையை நிறுவினார். மேலும் அவரது பிறந்த நாளை 2002-ம் ஆண்டு முதல் அரசு விழாவாகக் கொண்டாடவும் ஆணையிட்டார். அதேபோல் எனது தலைமையிலான ஆட்சியில், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையருக்கு மணிமண்டபம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இப்பொழுது பயன்பாட்டிற்கு வந்துள்ளது.
பெரும்பிடுகு முத்தரையரின் 1350-வது சதய விழாவை முன்னிட்டு, அ.தி.மு.க. சார்பில் 23.5.2025 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில், திருச்சி ஒத்தக்கடையில் அமைந்துள்ள பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும். இந்நிகழ்ச்சியில் கட்சியினரும், பொதுமக்களும் பெருந்திரளான அளவில் கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வரும் 23-ம் தேதி
# தஞ்சையில் அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்

**சென்னை, மே 21-**
அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமைகளை கண்டித்து, தஞ்சாவூரில் அ.தி. மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள திருவிடைமருதூர் பகுதியில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண்ணுக்கு உரிய நீதி கிடைத்திடவும்; பாலியல் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை கிடைத்திடவும்; தமிழகம் முழுவதும் அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமைகளை கண்டித்தும் அ.தி.மு.க. தஞ்சாவூர் மாநகரத்தின் சார்பில், வரும் 23ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி அளவில், தஞ்சாவூர் புதிய தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளான அளவில் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

# சினிமா CINI செய்திகள்

## வேல்ஸ் இல்ல புதுமண தம்பதிக்கு பத்திரிகையாளர் சங்கம் வாழ்த்து




வேல்ஸ் பல்கலைக் கழக வேந்தரும் திரைப்பட தயாரிப்பாளருமான டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்களின் மகள் ப்ரீத்தா - லஷ்வின் திருமண விழா சமீபத்தில் ஆடம்பரமாக நடைபெற்றது. இந்நிலையில் புதுமண தம்பதிகள் பத்திரிக்கையாளர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.. விழா மேடையில் மணமக்களுக்கு 71-ஆண்டு பாரம்பரியம் மிக்க சினிமா பத்திரிகையாளர் சங்கம் சார்பில் திருமண பரிசு வழங்கப்பட்டது. அப்போது பேசிய ஐசரி கே. கணேஷ், தங்கள் நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்படும் சினிமா குறித்த அப்படேட்டுகளை விரைவில் அறிவிப்பதாக கூறினார்.

## விஜய் மில்டன் இயக்கும் புதிய படம்



உய்யாலா ஜம்பாலா படத்தின் மூலம் ரசிகர்களின் மனதை வென்ற ராஜ் தருண் இப்போது, தமிழ் சினிமாவிற்கு காலடி எடுத்து வைக்கிறார். 10 எண்ணுறதுக்குள்ள, கோலி சோடா, மழை பிடிக்காத மனிதன் உள்ளிட்ட பல படங்களை இயக்கிய பிரபல ஒளிப்பதிவாளர் விஜய் மில்டன் தனது அடுத்த படம் குறித்த அறிவிப்பை தற்போது வெளியிட்டுள்ளார். படம் குறித்து இயக்குனர் விஜய் மில்டன் கூறுகையில்: "இந்த படம் எனக்கு மிக நெருக்கமான ஒரு படம். கோலி சோடா பாணியை தொடர்ந்து- இது ஒரு சக்திவாய்ந்த, உணர்ச்சி மிக்க கதையை கொண்டு வருகிறது. இப்படத்தில் முக்கிய வேடத்தில் ராஜ் தருண் நடிக்கிறார். புரொடக்ஷன் நம்பர் 5 என தற்காலிக பெயரிடப்பட்டுள்ள இந்த படமானது, தமிழ் மற்றும் தெலுங்கு பார்வையாளர்களை இணைக்கும் முயற்சியாக இருக்கும் என்றார். ரஃப் நோட் புரொடக்ஷன் தயாரிக்கும் இந்த படத்தின் மற்ற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் பற்றிய விவரங்கள் விரைவில் அறிவிக்கப்படும். என்று மேலும் கூறினார்

## ஜூன் 12 ல் வெளியாகும் 'ஹரி ஹர வீர மல்லு'



பவன் கல்யாண் நடிப்பில் தயாரிகி வரும் 'ஹரி ஹர வீர மல்லு' திரைப்படம் வரும் ஜூன் 12 ஆம் தேதியன்று வெளியாக உள்ளது. இப்படத்தில் பாபி தியோல், நிதி அகர்வால், சத்யராஜ், ஜிஷ்ணு செங்குப்தா ஆகியோர் முக்கிய பாத்திரத்தில் நடித்திருக்கிறார்கள். தயாரிப்பாளர்: ஏ. தயாகர ராவ்.

மெகா சூர்யா புரொடக்ஷன்ஸ் நிறுவனம் சார்பில் ஏ.எம். ரத்னம் வழங்குகிறார். தாமதங்கள், தடைகள் பல இருந்த போதிலும், அந்த தாமதங்களை எல்லாம் எதிர்கொண்டு ஒரு இயக்குநராக இருந்து ஒவ்வொரு துறையையும் கட்டமைத்து சீராக வழிநடத்தி சென்று ஒவ்வொரு காட்சியும் அற்புதமாக இயக்கியிருக்கிறார் இயக்குனரான ஏ.எம். ஜோதி கிருஷ்ணா.

ஆஸ்கார் விருது பெற்ற எம்.எம். கீரவாணியின் இசை, மனோஜ் பரமஹம்சாவின் ஒளிப்பதிவு, தோட்டா தரணியின் ப்ரொடக்ஷன் டிசைன் ஆகியவை மொத்தமாக சேர்ந்து பார்வையாளர்களுக்கு விருந்து படைக்க வருகிறது 'ஹரி ஹர வீர மல்லு'

## மே 22 ல் ரிலிசாகும் 'ஹார்ட் பீட் சீசன் 2'




ஹார்ட் பீட்' வெப்சீரிஸில் தேஜூ மற்றும் 'டூரிஸ்ட் ஃபேமிலி' படத்தில் நடித்து பிரபலமான நடிகை யோகலட்சுமி, 'ஹார்ட் பீட்' சீசன் 2 வெப்சீரிஸின் வெளியீட்டு தேதியை வெளியிட்டுள்ளார்.ஜியோ ஹாட்ஸ்டாரால் நடத்தப்பட்ட ரசிகர்கள் உரையாடலின் போது வெளியீட்டுத் தேதியை யோகலட்சுமி தெரியப்படுத்தியது ரசிகர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. சீசன் 2 டீசர் வெளியீட்டைக் கொண்டாடும் விதமாகவும், படக்குழுவினருடனான உரையாடலாகவும் இருக்கும்படியாக ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது..

அதில் யோகலட்சுமி கலந்து கொண்டு பேசுகையில், 'ஹார்ட் பீட்' சீசன் 2 ன் வெளியீட்டு தேதியை மே 22 என்று குறிப்பிட்டிருந்தார். இதனை உறுதிப்படுத்தும் விதமாகவும் ஜியோஹாட்ஸ்டார் வெளியீட்டு தேதியுடன் புதிய டைட்டில் டிராக் ஒன்றை சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளது. தமிழ்,

தெலுங்கு மற்றும் இந்தி மொழிகளில் வெளியாகவுள்ள 'ஹார்ட்பீட் சீசன் 2' பல புது கதாபாத்திரங்கள், தீர்க்கப்படாத புதிர்கள் மற்றும் புதிய கதைக்களத்தைப் பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத்த இருக்கிறது.

## சிவகாசி- திருத்தங்கல் ரெயில்வே பாதையில் பராமரிப்பு பணிக்காக மூடுவதாக அறிவிப்பு

**விருதுநகர், மே 21-**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி - திருத்தங்கல் சாலையை இணைக்கும் இரயில்வே இருப்பு பாதையில் உள்ள வழித்தடத்தில் பராமரிப்பு பணிகள் செய்யப்பட உள்ளது.

எனவே வருகிற 24-ம் தேதி அன்று இரவு 11 மணி முதல் 25-ம் தேதி அன்று காலை 6 வரை பராமரிப்பு பணிகளுக்காக, அந்த ஒரு வழிதடத்தை மட்டும் மூடுவதாக ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

எனவே, பொதுமக்கள் அனைவரும் மேற்கண்ட வழியை விடுத்து, மாற்று வழியை பயன்படுத்திக் கொள்ளுமாறு ரயில்வே நிர்வாகத்தின் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வரும் ஆகஸ்ட் 29-ல் திருமணம்: விஷால்-சாய் தன்ஷிகா அறிவிப்பு



2004 ம் ஆண்டு வெளியான "செல்லமே" படத்தின் மூலம் விஷால் கதாநாயகனாக அறிமுகமானார். தொடர்ந்து "சண்டகோழி", "திமிரு", "தாமிரபரணி" என பல படங்களில் கதாநாயகனாக நடித்து அவருக்கென தனி ரசிகர் பட்டாளத்தை உருவாக்கினார். இதனைத் தொடர்ந்து "விஷால் ஃபிலிம் பேக்டரி" என்னும் சொந்த தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கி அதன்மூலம் பல வெற்றிப் படங்களை தயாரித்தார். மேலும், தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவராகவும், நடிகர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றி உள்ளார். திரைப்படங்களை தாண்டி, அவரது தனிப்பட்ட வாழ்க்கை அதிலும் குறிப்பாக அவரது திருமணம் குறித்து அவ்வப்போது தமிழ் சினிமா வட்டாரங்களில் பல்வேறு வதந்திகள் வெளியாகி ரசிகர்களிடையே பல குழப்பங்களை ஏற்படுத்தியது. இந்நிலையில் தன்னுடைய திருமணம் குறித்து சமீபத்தில் பேசிய விஷால், "நடிகர் சங்க கட்டடம் திறக்கப்பட்ட பிறகுதான் எனது திருமணம் நடைபெறும் என அறிவித்திருந்தார். இதனிடையே வரும் ஆகஸ்ட் மாதம் 15ஆம் தேதி நடிகர் சங்க கட்டடம் திறக்கப்பட உள்ளது. இந்நிலையில் சாய் தன்ஷிகாவின் ஆக்ஷன் படமான யோகி டா படத்தின் இசை வெளியீட்டு விழாவில் விஷால் பங்கேற்று திருமண அறிவிப்பை பகிர்ந்துள்ளார். இதன்படி ஆகஸ்ட் 29ஆம் தேதி இருவருக்கும் திருமணம் நடைபெறவுள்ளது.

## முதல் நாளில் வசூல் மழை பொழிந்த மிஷன்: இம்பாசிபிள்



டாம் குரூஸ் நடித்த 'மிஷன்: இம்பாசிபிள் - தி ஃபைனல் ரெக்கனிங்' ஹாலிவுட் திரைப்படம் பாக்ஸ் ஆபிஸில் வசூல் மழை பொழிந்துள்ளது. இந்தியாவில் 2025 ல் வெளியான ஹாலிவுட் படங்களில் முதல் நாளில் அதிக வசூல் செய்த திரைப்படம் இதுவாகும். மே 17 அன்று இந்தியாவில் வெளியான இப்படம் முதல் நாளில் சுமார் ரூ.17.50 கோடிக்கு மேல் வசூல் சாதனை நிகழ்த்தியுள்ளது. மிஷன் இம்பாசிபிஸ் தி ஃபைனல் ரெக்கனிங் திரைப்படத்திற்கு இந்தியாவில் மிகப்பெரிய அளவில் எதிர்பார்ப்பு இருப்பதை அறிந்த நடிகர் டாம் குரூஸ், இந்தியர்களுக்காக ஸ்பெஷல் மெசேஜ் ஒன்றையும் வீடியோ வாயிலாக தெரிவித்து இருந்தார். அதில் இந்தியாவின் கலாச்சாரம் தனக்கு மிகவும் பிடிக்கும் என்று கூறிய அவர், தான் பாலிவுட் ஸ்டைலில் ஒரு படத்தில் நடிக்க விரும்புவதாக தெரிவித்தார்.

## விஜய் ஆண்டனி தயாரித்து நடிக்கும் 'மார்கன்'



விஜய் ஆண்டனி ஃபிலிம்ஸ் கார்ப்பரேஷன் மற்றும் மீரா விஜய் ஆண்டனி தயாரிக்கும் 12வது படமான 'மார்கன்' உலகம் முழுவதும் ஜூன் 27 அன்று திரையரங்குகளில் வெளியியாக உள்ளது. முன்னணி எடிட்டராக வலம் வந்த லியோ ஜான் பால் இயக்கியுள்ள இப்படம், பரபரப்பும் மர்மமும் கலந்த குற்றவியல் த்ரில்லராக உருவாகியுள்ளது. விஜய் ஆண்டனியின் சித்தப்பா மகன் அஜய் திஷான் இந்த படத்தின் முக்கிய வில்லனாக அறிமுகமாகிறார். மேலும், இந்த படத்தில் சமுத்திரக்கனி, மகாநதி சங்கர், பிரித்திகா, வினோத் சாகர், பிரிகிதா உள்ளிட்ட பல முன்னணி நட்சத்திரங்கள் நடித்துள்ளனர். குடும்பம்ங்கள் ரசிக்கக்கூடிய விதத்தில் உருவாகியுள்ளது இப்படம், யுவா.எஸ் ஒளிப்பதிவு செய்திருக்கும் இப்படத்தின் கலை இயக்குநராக ராஜா.ஏ பணியாற்றியுள்ளார். விஜய் ஆண்டனி இசையமைத்துள்ளார். த்ரில்லர் ஜானரில் உருவெடுத்துள்ள மார்கன் . திரைப்படத்தில் மும்பையில் நீருக்கடியில் எடுக்கப்பட்ட காட்சிகள் மற்றும் VFX ஆகியவை சிறப்பாக அமைந்துள்ளதாக விஜய் ஆண்டனி தெரிவித்துள்ளார்..



சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன், முன்னேற விழையும் மாவட்டங்களில் இந்திய அளவில் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து முன்னேற்றத்தில் சிறப்பாக செயல்பட்டதற்காக விருதுநகர் மாவட்டத்திற்கு இந்திய அரசின் நிதி ஆயோக் மூலம் வழங்கப்பட்ட விருது மற்றும் 3 கோடி ரூபாய் பரிசு தொகையை காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் முருகானந்தம் உள்ளார்.

## அ.தி.மு.க. பூத் கமிட்டி நிர்வாகிகளின் மறு ஆய்வு ஆலோசனைக்கூட்டம்



**இளையான்குடி, மே 21-**

இளையான்குடி அதிமுக பேரூர் கழகம் சார்பாக பேரூர் கழகச் செயலாளர் நாகூர் மீரா தலைமையில் கழக அமைப்புச் செயலாளர் மாவட்ட பொது கமிட்டி பொறுப்பாளர் சீனிவாசன் சிவகங்கை மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் ஆகியோர் முன்னிலையில் பூத் கமிட்டி நிர்வாகிகள் மறு ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், குணசேகரன், மாவட்ட எம். ஜி.ஆர். மன்ற செயலாளர் சிவ தேவ குமார்இளைஞர் அணி துணைச் செயலாளர் கருணாகரன்,

சிவகங்கை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் மாரிமுத்து, ஒன்றிய கழகச் செயலாளர் பாரதி ராஜன், சோனை ரவி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் செல்வராஜ், பேரூர் நிர்வாகிகள் அபூபக்கர், சையது இப்ராஹிம், அபுல் கலாம் ஆசாத், அப்பாஸ் அலி,மீரான் கனி சையது அன்சாரி,கலீல் அகமது ,திருநாவுக்கரசு, அயூப் கான் ,சிவக்குமார் ,செல்வம் ,முருகன், அரசேந்திரன் தெய்வேந்திரன், கீழாயூர் சையது இப்ராஹிம் ,தாஜ் மைதீன், முகமது மைதீன், அபுல் கலாம் தஸ்தகீர்,புதூர் செய்யது, ஜாவித், நசீம், ரியாசுர் ரகுமான், தமீம் அன்சாரி அலி, செய்யது அன்சாரி செல்வகுமார், சிக்கந்தர் ஹம்சாஅலி,சபீர் முகமது, யாசர் அலி அராபத், திவான் முகம்மது, சங்கன் என்ற பாலு ,இப்ராம்சா, பைசில் ரகுமான், சோலைமலை, சபீர் அகமது ,லியாஸ் அகமது, முகம்மது ஆசிக் மற்றும் கழக நிர்வாகிகள் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## கமுதி அருகே வண்ணாங்குளம் கிராமத்திற்கு அரசு பஸ் இயக்கம்



**கமுதி, மே 21-**

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே உள்ள வண்ணாங்குளம் கிராமத்தில் 500-க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இந்த கிராமத்திற்கு இதுவரை எவ்வித அரசு மற்றும் தனியார் பேருந்து போக்குவரத்து வசதியும் இருந்தது இல்லை.

இப்பகுதி மக்கள் கமுதி செல்ல வேண்டுமென்றால் ஊரில் இருந்து சுமார் 6 கிலோ மீட்டர் நடந்து கமுதி - கீழ்குடி சாலைக்கு சென்று பேருந்தில் செல்லும் நிலை இருந்து வந்தது.இந்நிலையில் தங்கள் ஊருக்கு பேருந்து வேண்டி, முதுகுளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், வனத்துறை மற்றும் கதர்வாரியத்துறை அமைச்சருமான ராஜகண்ணப்பனிடம் தங்கள் ஊரின் வழியாக கமுதி சென்று வர பேருந்து ஏற்பாடு வசதி செய்து தருமாறு கோரிக்கை வைத்தனர்.அதன்படி அமைச்சர் கோரிக்கை பரிசீலிக்கபட்டு நேற்று கமுதியில் இருந்து பம்மனேந்தல் செல்லும் பேருந்து வண்ணாங்குளம் சென்று அதே வழியில் மீண்டும் செல்லும்படி புதிய வழித்தடம் தொடங்கப்பட்டது. இந்த பேருந்தில் மகளிர் பயணம் செய்வதற்கு இலவசமாகும். மேலும் இதுவரை தங்கள் பகுதிக்கு பேருந்தே வராததால் இக் கிராம மக்கள் புதிதாக பேருந்து வந்த போது விண் அதிர குலவை போட்டு, வரவேற்று பேருந்துக்கு மாலை அணிவித்து, சந்தனம், குங்குமம் இட்டு, ஆரத்தி எடுத்து நடத்துனர் மற்றும் ஓட்டுனர்களுக்கு சால்வை அணிவித்து குலவை போட்டு வரவேற்று அந்த பேருந்தில் பயணம் செய்து மகிழ்ந்தனர்.பேருந்து வந்தது முதல் கிளம்பியது வரை பெண்களின் குலவை சத்தம் அப்பகுதியை சந்தோஷ கடலில் ஆழ்த்தியது தங்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய அமைச்சர் ராஜ கண்ணப்பனுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டனர். முன்னதாக இந்த பேருந்தை திமுக மத்திய ஒன்றிய செயலாளர் சண்முகநாதன் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந் நிகழ்ச்சியில் தொ.மு.ச. பொதுச்செயலாளர் பச்சமால், அரசு பேருந்து கிளை மேலாளர் ராஜ்குமார் மற்றும் பார்த்திபனூர் முன்னாள் சேர்மன் சேதுதினகரன் உட்பட கிராம மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## விருதுநகர் அருகே 4 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை தந்தவர் கைது

**விருதுநகர், மே 21-**

விருதுநகர் அருகே இயற்கை உபாதையை கழிக்கச் சென்ற 4 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை தந்தவரை போக்சோ சட்டத்தில் போலீசார் கைது செய்தனர்.

விருதுநகர் அருகேயுள்ள கிராமத்தைச் சேர்ந்த 4 வயது சிறுமி. தனது தாய் இறந்து விட்டதால், பெரியம்மாவின் பராமரிப்பில் உள்ளார். இந்நிலையில், அவர் இயற்கை உபாதையை கழிப்பதற்காக வெளியே சென்றுள்ளார். சிறிது நேரத்தில் அச்சிறுமி பயந்தபடி வீட்டிற்குள் ஓடி வந்துள்ளார்.

அச்சிறுமியிடம் மெதுவாக விசாரித்ததில், மர்ம நபர் ஒருவர், பாலியல் ரீதியாக அவரை தொந்தரவு செய்தது தெரிய வந்தது. அந்த மர்ம நபர் அருகில் உள்ள வாழைத் தோட்டத்தில் தங்கி வேலை செய்து வந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து, சிறுமியின் உறவினர் கொடுத்த புகாரின் பேரில் அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் சிறுமிக்கு பலியல் தொல்லை கொடுத்த நபரை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## சிங்கம்புணரி அருகே குவாரியில் கல் சரிந்து 5 பேர் உயிரிழப்பு

**சிங்கம்புணரி, மே 21-**

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே கல் குவாரியில் கல் சரிந்ததில் 5 பேர் உயிரிழந்தனர்.

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி அருகே மல்லாக் கோட்டையில் தனியார் கல் குவாரி இயங்கி வருகிறது. நேற்று காலை குவாரி பள்ளத்தில் கல் சரிந்ததில் 7 பேர் சிக்கி கொண்டனர். இவர்களில் 3 பேர் புதைந்தனர். மேலும் 4 பேர் மீட்கப்பட்டு மதுரை தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் 2 பேர் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. சம்பவ இடத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத், தேவகோட்டை சார் ஆட்சியர் ஆயுஷ் வெங்கட் வட்ஸ் ஆகியோர் விசாரணை செய்து வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



● சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று இஸ்ரோ தலைவர் நாராயணன் சந்தித்து பேசினார். இதில் சதீஷ்தவான் விண்வெளி மையத்தின் இயக்குநர் ராஜராஜன், இஸ்ரோ இயக்குநர் வீரமுத்துவேல், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், நீர்வளத்துறை செயலாளர் ஜெ.ஜெயகாந்தன், நெடுஞ்சாலைகள் துறை செயலாளர் இரா.செல்வராஜ், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



● சென்னை ராணிமேரி கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ராணிமேரி கல்லூரியில் ரூ.42 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மாணவியர்களுக்கான விடுதி கட்டிடம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள், பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ரூ.120 கோடியே 2 லட்சத்து 80 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டிடங்கள், ஆய்வக கட்டிடங்கள், பணிமனைகள், விடுதி கட்டிடங்கள் போன்ற பல்வேறு கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் நடைபெற்ற கொலை மற்றும் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து கண்டுபிடித்து களவுச்சொத்துகளை மீட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர், பெருந்துறை காவல் உபகோட்ட துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், தலைமைக்காவலர்கள் மற்றும் காவலர்களை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து பாராட்டு சான்றிதழ்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இதில் தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் ஆகியோர் உடனிருந்தனர்.

### ஈரோடு, திருப்பூர் சம்பவங்களில் குற்றவாளிகளை பிடித்த

# காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு

சென்னை, மே 21-

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (20.5.2025) தலைமைச் செயலகத்தில், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் நடைபெற்ற கொலை மற்றும் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து கண்டுபிடித்து, களவுச் சொத்துகளை மீட்ட காவல் கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறை அலுவலர்களை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து, பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

ஈரோடு மாவட்டம், சிவகிரியில் கடந்த 28.04.2025-அன்று உச்சிமேடு மேகரையான் தோட்டம் என்ற இடத்தில் தோட்டத்து வீட்டில் தனியாக வசித்து வந்த ராமசாமி (72) மற்றும் பாக்கியம் (63) ஆகிய வயதான தம்பதியரை கொலை செய்து சுமார் 10 3/4 (பத்தேமுக்கால்) சவரன் நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்த சம்பவம்; திருப்பூர் மாவட்டம், அவிநாசிபாளையம், சேமலைக்கவுண்டன் பாளையத்தில் 28.11.2024-அன்று இரவு, தெய்வசிகாமணி (78), அவரது மனைவி அலமாத்தாள் (74) மற்றும் அவர்களது மகன் செந்தில்குமார் (44) ஆகியோரை கொலை செய்து, அவர்களிடமிருந்து 5 1/2 (ஐந்தரை) சவரன் தங்க நகைகள் மற்றும் ஒரு மொபைல் போன் ஆகியவற்றை கொள்ளையடித்த சம்பவம்; மேற்படி கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட நபர்களை கைது செய்து, விசாரணை செய்ததில் குற்றவாளிகள் இக்குற்ற சம்பவத்தை ஒப்புக்கொண்டனர். மேலும், இக்குற்றவாளிகள் வேறு சில கொலை, கொள்ளை 2 சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளனர். இவை குறித்தும் தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்குற்றசம்பவங்களை விரைந்து, புலனாய்வு செய்து குற்றவாளிகளை கைது செய்த, காவல்துறை தலைவர் (மேற்கு மண்டலம்) கோயம்புத்தூர் த.செந்தில்குமார், கோயம்புத்தூர் சரக காவல் துணைத் தலைவர் டாக்டர் வி. சசிமோகன் ஆகியோர் தலைமையிலான புலனாய்வு குழுவில் இடம்பெற்ற ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுஜாதா, பெருந்துறை உபகோட்ட கண்காணிப்பாளர் ஆர். கோகுலகிருஷ்ணன், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்திற்கு நேரில் அழைத்து பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்.



● திராவிட பேரொளி அயோத்திதாச பண்டிதரின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவ படத்திற்கு அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, கோவி.செழியன், சி.வி.கணேசன், மா.மதிவேந்தன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். உடன் மேயர் ஆர்.பிரியா, தமிழ் வளர்ச்சித்துறை செயலாளர் வே.ராஜாராமன், இயக்குநர் இரா.வைத்திநாதன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ் ஆயோர் உள்ளனர்.



● சேன்னையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் பணி குறித்து உயர் நிலைக்குழுவின் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கோவி.செழியன், பழனிவேல் தியாகராஜன், தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச்செயலாளர் பிரதீப்யாதவ், முதன்மைச்செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், உயர் கல்வித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, நிதித்துறை செயலாளர் எஸ்.நாகராஜன், கல்லூரிக்கல்வி ஆணையர் எ.சுந்தரவல்லி, ஆணையர் ஜெ.இன்னசென்ட் திவ்யா உள்ளனர்.

### மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்:

# துணை முதல்வர் உதயநிதி அதிகாரிகளுடன் ஆலோசனை

சென்னை , மே 21-

கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் பணி குறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் உயர் நிலைக்குழுவின் ஆய்வுக் கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது.

2025 – 2026-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிவிப்பின் படி கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் பணி குறித்து உயர் நிலைக்குழுவின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து துணை முதல்வர் அரசு உயர் நிலைக் குழுவினருடன் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி பேசுகையில், தொழில் நுட்பத் திறனில் உலக அளவில் சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்கும் வகையில் 2025 – 2026-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் அடுத்த 2 ஆண்டுகளில் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. முதல்வர் ஸ்டாலினின் முக்கியத் திட்டங்களில் ஒன்றான இத்திட்டத்தை மாணவர்களிடம் விரைந்து கொண்டு சென்று சேர்த்திட அனைத்து அலுவலர்களும் தங்களுக்கான பணிகளை அர்பணிப்பு உணர்வுடன் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர. நா. முருகானந்தம்,சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர். பிரதீப் யாதவ்தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், உயர் கல்வித்துறை செயலாளர் சமயமூர்த்தி, நிதித்துறைசெயலாளர் (செலவினம்) எஸ்.நாகராஜன், கல்லூரிக் கல்வி ஆணையர் திஎ. சுந்தரவல்லி, தொழில் நுட்பக் கல்வி ஆணையர் ஜெ.இன்னசென்ட் திவ்யா, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வெள்ளத்தடுப்பு பணிகள் குறித்து...(1-ம் பக்க தொடர்ச்சி)

10.3 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஓட்டேரி நல்லா கால்வாயில் தூர்வாருதல், கரைகளை பலப்படுத்துதல், புதிய தடுப்பு சுவர் அமைத்தல், தடுப்பு சுவற்றின் மேல் வேலி அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளை முதல்வர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**பணிகள் முடிக்கப்பட....**

ஒவ்வொன்றும் 3.3 மீ அகலமும் 1.7 மீ உயரமும் கொண்ட இரண்டு நீர் போக்கு வழி பகுதிகள் கொண்ட ஓட்டேரி நல்லா கால்வாயில், மெட்ரோ இரயில் பணிகளுக்காக ஒரு நீர் போக்கு வழி பகுதி தற்காலிகமாக அடைக்கப்பட்டு, மற்றொரு நீர்போக்கு வழி பகுதியில் மழைநீர் தடையில்லாமல் வெளியேற வகை செய்யப்பட்டுள்ளது.

பருவ மழை தொடங்கும் முன்னர் இரு நீர்போக்கு வழி பகுதியிலும் மழைநீர் வெளியேறும் வகையில் பணிகள் முடிக்கப்பட வேண்டும் என்று அலுவலர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். பின்னர், மெட்ரோ ரயில் நிறுவனத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஓட்டேரி மெட்ரோ இரயில் நிலையக் கட்டுமானப் பணிகளை முதல்வர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**தேவையான நிதி...**

இந்த ஆய்வின்போது, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனைத்து வெள்ளத் தடுப்பு பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என்றும், அதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் கூடுதல் பணியாளர்கள் மற்றும் இயந்திரங்களை கொண்டு அப்பணிகள் அனைத்தையும் விரைவில் முடிக்க வேண்டுமென்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

# சுப்ரீம் கோர்ட்டில் காரசார...(1-ம் பக்க தொடர்ச்சி)

பின்பற்றாமல் கையகப்படுத்தும் வகையில் தான் இந்த சட்டம் உருவாக்கப்பட்டு இருக்கின்றது. வக்ப் என்றால் என்ன என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். வக்பு என்பது அல்லா அல்லது கடவுளுக்காக கொடுக்கப்படுவது. அவ்வாறு கடவுளுக்கு கொடுக்கப்படுவதை வேறு யாருக்கும் மாற்ற முடியாது.

ஒருமுறை வக்பு என அறிவிக்கப்பட்டால் அதை எப்போதும் மாற்ற முடியாது. பதிவு செய்யப்பட்ட சொத்தில் தற்போது ஒருவர் சந்தேகம் எழுப்பினால் அந்த சொத்து பறிபோகும் நிலை உள்ளது. பழங்கால ஒரு அமைப்பை அதன் தன்மையை இழக்க செய்திடும். மேலும் சிறுபான்மை உரிமையில் தலையிடுவதாகும்.

இவ்வாறு வாதிட்டார் கபில்சிபல்.

வாதங்களை கேட்ட நீதிபதிகள், மேலும் முந்தைய 1995 வக்ப் சட்டத்தின் விதிகளை நிறுத்தி வைப்பதற்கான எந்தவொரு மனுவையும் பரிசீலிக்கப் போவதில்லை என்று தெளிவுப்படுத்தினர். மேலும் இந்த விவகாரம் ஒரு அரசியல் சாசனம் தொடர்பானது. வழக்கு வலுவானதாக இல்லாத பட்சத்தில் தேவையில்லாமல் கோர்ட் தலையிடுவதில்லை.

வக்ப் போர்டு சொத்து தொடர்பாக அவுரங்காபாத்தில் பல்வேறு சர்ச்சை சொத்துக்கள் உள்ளதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

### தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு;

# 3 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

கிருஷ்ணகிரி, மே 21-

தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை ஆகிய 3 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அருகே உள்ள கெலவரப்பள்ளி அணை நீர்பிடிப்பு பகுதியான கர்நாடகாவில் கனமழையால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. அணை வேகமாக நிரம்பி வரும் நிலையில், தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. தற்போது தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை ஆகிய 3 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது. தென்பெண்ணை ஆற்றங்கரையோர மக்கள் ஆற்றில் இறங்கவோ, குளிக்கவோ வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

கிருஷ்ணகிரி கே.ஆர்.பி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது அணையில் இருந்து பிரதான ஷட்டர் வழியாக 2,243 கன அடி தண்ணீர் தென்பெண்ணை ஆற்றில் திறக்கப்பட்டுள்ளதால் தரைப் பாலத்தை மூழ்கி தண்ணீர் செல்கிறது. இதனால் கே.ஆர்.பி., அணைக்கு செல்ல பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் 71-வது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட வடக்கு 1-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் கே.வி.கே.கண்ணன் ஏற்பாட்டில் புதூர் பஸ் நிலையத்தில் பொதுமக்களுக்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பிரியாணி வழங்கினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், ஏ.பார்த்திபன், கே.ஜெயவேல், எம்.ஜி.ராமச்சந்திரன், வி.கணேசன், விநாயகமூர்த்தி, வி.பி.ஆர்.செல்வகுமார், கே.கே.நகர் மணி மற்றும் புதூர் நாகராஜன், கே.வி.கே.வெங்கடேசன், கார்த்திக்கேயன், சபரிபாண்டி, ஆசைபாண்டி, மாரி ஆனந்தப்பன், சவுந்தரராஜன், பூமிநாதன், சின்னபாண்டி உள்ளனர்.